14.09.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கன மழையால் விளைச்சல் பாதிப்பு:வெங்காயம் விலை கடும் உயர்வு

பெங்களூரு;வட கர்நாடகாவின் பல இடங்களில் கன மழை பெய்ததால், பெருமளவிலான விளைச்சல் சேதமடைந்துள்ளது. அதே நேரத்தில் போதிய மழையின்றி, வெங்காய விளைச்சல் குறைந்துள்ளது. பெங்களூரில், வெங்காய விலை கிலோவுக்கு, 70 - 75 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.வெங்காய வரத்து குறைந்ததால், பெங்களூரில் வெங்காயத்தின் விலை தொடர்ந்து உயர்கிறது. வெங்காயத்தின் மொத்த விலை கிலோவுக்கு, 65 ரூபாயாகவும், சில்லரை விலையில், 70- - 75 ரூபாயாகவும்விற்கப்படுகிறது.கடந்த, 6ம் தேதி வரை, வட கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய இடங்களில் இருந்து பெங்களூருக்கு வெங்காயம் வந்து கொண்டிருந்தது. ஆனால், கலசா பண்டூரி, மஹதாயி திட்டத்தை செயல்படுத்த வலியுறுத்தி, விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், தார்வாட், கதக் போன்ற பகுதிகளில் இருந்து அதிக அளவில் வெங்காயம் வினியோகம் செய்யப்படவில்லை. இதனால் வெங்காயத்தின் விலை உயர்கிறது.தாவணகரெ, ஹாவேரி, சித்ரதுர்கா ஆகிய மாவட்டங்களில் இருந்தும், பெங்களூருக்கு அதிக அளவில் வெங்காயம் வரும். வறட்சியால் வெங்காய விளைச்சல் உலர்ந்து விட்டதில், வெங்காய வரத்து குறைந்துள்ளது.

'கடந்த ஐந்து ஆண்டுகளில், இரண்டாவது முறையாக வெங்காய விலை உயர்ந்துள்ளது. 2010, 2011, 2012ம் ஆண்டுகளில், வெங்காய விலை இறங்குமுகமாக இருந்தது' என, தோட்டக்

கலை அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

## பருவ மழை பொய்த்ததால்அரிசி விலை உயர்வு

பெங்களூரு:கர்நாடக மாநிலத்தில், பருவ மழை பொய்த்ததால், பருப்பு வகைகள் மட்டுமின்றி, அரிசியின் விலையும் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. தற்போது, அரிசியின் விலை குவிண்டாலுக்கு, 500 - 600 ரூபாய் வரை அதிகரித்து உள்ளது. வரும் நாட்களில், மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.போதிய அளவு, பருவ மழை பெய்யாததால், எதிர்பார்த்த விளைச்சல் கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டு உள்ளன.

கோடை விளைச்சல்?மழை பற்றாக்குறை யால், மாநிலத்தின் அலமாட்டி, துங்கபத்ரா போன்ற அணைகளில், தண்ணீர் குறைந்து உள்ளது. கோடைக்கால நெல் விளைச்சலுக்கு, தண்ணீர் திறந்து விட முடியாது என, நீர்ப்பாசனத் துறை சூசகமாக தெரிவித்து உள்ளது. இதனால், கோடைக்காலத்தில் நெல் விளைச்சலுக்கு தண்ணீர் கிடைக்கும் என்பதில் உறுதியில்லை.

ராய்ச்சூரு, கொப்பால், பல்லாரி ஆகிய மாவட்டங்களில் நெல் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. இப்பகுதிகளில், வழக்கமாக, ஜூலையில், நெல் விதைக்கும் பணி துவங்கி, ஆகஸ்ட் இறுதியில் முடியும். தற்போது தண்ணீர் இல்லாததால், விதைப்புப் பணிகள்

60 சதவீதம் கூட முழுமையடையாமல் உள்ளன.தற்போது கர்நாடகாவில், பழைய சோனா மசூரி அரிசியின் விலை, குவிண்டாலுக்கு, 3,900 ரூபாய்

முதல் 4,000 ரூபாய் வரை இருந்தது. தற்போது, 4,600 ரூபாயிலிருந்து, 4,900 ரூபாயாக உயர்ந்து உள்ளது. சோனா மசூரி ஸ்டீம் அரிசி விலை, 2,800 முதல் 3,000 ரூபாய் வரை இருந்தது. தற்போது, 3,500 முதல் 3,800 ரூபாய் வரை உயர்ந்து உள்ளது.

வியாபாரிகளால்...கங்கா காவிரி நெல்லின் விலை, 75 கிலோவுக்கு, 1,100 -- -1,150 ரூபாயாக இருந்தது. தற்போது, 1,400 -- 1,500 ரூபாயாக அதிகரித்து உள்ளது. பழைய சோனா மசூரி நெல்லின் விலை, 1,600 -- 1,650 ரூபாயாக இருந்தது. தற்போது, 1,800 -- 1,950 ரூபாயாக உயர்ந்து உள்ளது.இந்நிலையில், ராய்ச்சூரு, கொப்பால், துமகூரு, பல்லாரி, ஆந்திரா, தமிழக வியாபாரிகள் அரிசி மற்றும் நெல்லை கர்நாடகாவிலிருந்து வாங்கி செல்கின்றனர். இதனால், வரும் நாட்களில், அரிசியின் விலை மேலும் அதிகரிக்கலாம் என, வர்த்தகர்கள்கூறுகின்றனர்.

**மழை இல்லாததால் பயிர்கள் கருகின: நீரை விலைக்கு வாங்கும் விவசாயிகள்**



பழநி:பழநி அருகே சத்திரப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் மழைபெய்யாத காரணத்தால் 1000 ஏக்கர் பரப்பளவிலான

மக்காசோளம்,பருத்தி நடவுபருவத்திலேயே கருகி வீணாகியுள்ளன.பழநி அருகே சத்திரப்பட்டி, கணக்கன் பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, வேலூார், சிந்தலவாடம்பட்டி, ராமபட்டிணம் புதுார் உள்ளிட்டப்பகுதியில் ஏராளமான விவசாயிகள் மழையை நம்பி 1000 ஏக்கர் பரப்பளவில் மக்காசோளம், பருத்தி, சோளம் நடவு செய்துள்ளனர். கடந்த சிலமாதங்களாக மழைபெய்ய வில்லை. வளரும் பருவத்திலேயே மக்காசோளம்,பருத்தி செடிகள் கருகி விட்டன. ஏக்கருக்கு ரூ.3ஆயிரம் வரை செலவு செய்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருசிலர் டிராக்டர், லாரிகளில் 6 ஆயிரம் லிட்டர் தண்ணீரை ரூ.2,500க்கு விலைக்குவாங்கி பயிர்களுக்கு ஊற்றுகின்றனர்.

மஞ்சநாயக்கன்பட்டி விவசாயி சுப்ரமணி கூறுகையில்,“ எங்க பகுதியில் 500 ஏக்கரில் மக்காசோளம் பயிரிட்டுள்ளோம். ஒரு பை விதை ரூ.850 முதல் ரூ.900 வரை வாங்கி வயல் தயார்செய்து, நடவுக்கூலி, உரம், வண்டிவாடகை என ஒரு ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் முதல் ரூ.3ஆயிரம் செலவாகியுள்ளது. மழைபெய்யாத காரணத்தால் முளைவிடும் பருவத்திலேயே பயிர் மண்ணோடு மண்ணாக கருகிவிட்டது. மீதியுள்ளவற்றை காப்பாற்ற தண்ணீரை விலைக்கு வாங்கி ஊற்றிவருகிறோம். இதுவும் சில நாட்கள் தான் சமாளிக்க முடியும், அதற்குள் மழைபெய்தால் மட்டுமே பயிர்களை காப்பாற்ற முடியும். இல்லையெனில் அனைத்தும் கருகி ரூ.பல லட்சம் இழப்பு ஏற்படும். இதே நிலைதான் பருத்திக்கும் உள்ளது,”என்றார்.

## சின்ன வெங்காயம் வரத்து அதிகரிப்பால் விலை சரிவு:பெரிய வெங்காயம் விலையும் குறைந்தது

சேலம்:தமிழகத்தில் சின்னவெங்காயம் அறுவடை துவங்கி உள்ளதால் விலை சரிவு ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக பெரிய வெங்காயம் விலையும் குறைந்துள்ளது.தமிழகத்தில் சின்ன வெங்காயம் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லாததால் அதன் விலை ஆகஸ்ட் மாதத்தில் உயர்ந்தது. தமிழகத்தில் சின்ன வெங்காயம் அதிக அளவில் விலையும் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திண்டுக்கல், சேலம், நாமக்கல், தர்மபுரி மாவட்டங்களில் அறுவடை துவங்கி உள்ளது. அதே நேரத்தில் ஆந்திரா கர்நாடகா மாநில சின்ன வெங்காய வரத்தும் அதிகரித்துள்ளதால் விலை சரிவு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் உழவர் சந்தைகளில் சின்னவெங்காயம் கிலோ 35 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று 25 ரூபாயாக சரிந்தது. வெளிமார்க்கெட்டில் கடந்த வாரம் 40ரூபாயாக விற்பனையான சின்ன வெங்காயம் நேற்று 28 ரூபாயாக விலை குறைந்தது.

சின்னவெங்காய விலை சரிவை அடுத்து பெரிய வெங்காயம் விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் பெரிய வெங்காயம் உழவர்சந்தைகளில் முதல் தரம் கிலோ 68 ரூபாய்க்கு விற்றது 50 ரூபாயாகவும் இரண்டாம் தரம் கிலோ 60 ரூபாய்க்கு விற்றது 45 ரூபாயாக சரிந்துள்ளது.

சேலம் லீபஜரை சேர்ந்த பெரிய வெங்காய வியாபாரி கதிரேசன் கூறியதாவது:

தமிழகத்தில் சின்ன வெங்காயத்தின் அறுவடை துவங்கி உள்ள நிலையில் கர்நாடகா மாநிலம் மைசூரில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் வெங்காயத்தின் வரத்தும் அதிகரித்துள்ளது.

தமிழகத்தின் பெரிய மார்க்கெட்டுக்களான சென்னை கோயம்பேடு, சேலம் லீபஜார், விருதுநகர், நாகர்கோவிலின் வடசேரி மதுரை திருச்சி கோவை ஆகிய இடங்களுக்கு தற்போது நாள் ஒன்றுக்கு 100 லாரிகளில்

சின்ன வெங்காயம் விற்பனைக்கு வருகிறது. இந்த வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் சின்ன வெங்காயம் விலையில் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது.மேலும் பெரிய வெங்காயம் வரத்தும் படிப்படியாக அதிகரித்து வருவதால் அதன்விலையும் குறைந்து வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## வரத்து அதிகம் மல்லிகை விலை சரிவு

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் மல்லிகை பூ விலை கிலோ ரூ.80 ஆக சரிந்தது.திண்டுக்கல் பகுதியில் ஏ.வெள்ளோடு கொடைரோடு சிறுநாயக்கன்பட்டி செம்பட்டி ஆத்துார் ரெட்டியார்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் பூக்கள் திண்டுக்கல் மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகின்றன. தினமும் 3.5 டன் வரை விற்பனை செய்யப்படும். இரு வாரங்களுக்கு முன் கிலோ ரூ.200 க்கு விற்றது. தற்போது தகுந்த சீதோஷ்ண நிலையால் மல்லிகை விளைச்சல் அதிகரித்துள்ளது.

இதனால் மார்க்கெட்டிற்கு வரத்தும் அதிகரித்தது. நேற்று 5 டன் வரை விற்பனைக்கு வந்தன. மேலும் முகூர்த்தம் இல்லாததால் வெளியூர் வியாபாரிகள் குறைந்த அளவே வாங்கி சென்றனர். இதனால் கிலோ ரூ.80 ஆக குறைந்தது.வியாபாரி ஒருவர் கூறுகையில் “ ஆவணியில் விலை உயரும் என எதிர்பார்த்தோம். விளைச்சல் அதிகரித்ததால் விலை குறைந்தது. மழை பெய்ய துவங்கினால் பூக்களின் விலை உயரும்” என்றார்.

## மேட்டூர் அணை நிலவரம்

மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் 78.02 அடியாகவும், நீர் இருப்பு 40.01 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 2,436 கனஅடியாக உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து

கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 700 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

**தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால் மக்கள் தவிப்பு நீர்வளம் குறைந்து வருவதால் விவசாயிகள் கவலை**

தியாகதுருகம்: தென்மேற்கு பருவமழை இவ்வாண்டும் ஏமாற்றிவருவதால், நீர் நிலைகள் வறண்டு நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால், பயிர்சாகுபடி துவங்க முடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில், கடந்த 3 ஆண்டுகளாக பருவ மழை குறைந்து நீர்வளம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் உள்ள ஏரி, குளம், குட்டைகள் தொடர்ந்து வறண்டு கிடப்பதால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது.

மாவட்டத்தில் உள்ள கோமுகி அணையை தவிர வீடூர், மணிமுக்தா அணை கடந்த 2 ஆண்டுகளாக நிரம்பவில்லை. வீடூர் அணையில் கடந்த இரண்டாண்டுகளாக நீர் வரத்து இல்லாததால், குட்டை போல் காட்சியளித்து வருகிறது. இதனால் ஆயக்கட்டு பாசன நிலங்கள் பல நூறு ஏக்கர் பரப்பில் தரிசாகக் கிடக்கிறது.

குறிப்பாக நன்செய் பயிரான நெல் சாகுபடி பரப்பு 3 ல் ஒரு பங்கு குறைந்து விட்டது. நீர் நிலைகளுக்கான வரத்துக் வாய்க்கால்கள் ஆக்கிரமிக்கப்பட்டதாலும், பல இடங்களில் பரமரிப்பின்றி தூர்ந்துபோய் கிடப்பதாலும், கிடைக்கும் மழைநீர் ஏரி, குளங்களுக்கு செல்லாமல் வீணாகிறது. தொடர்ந்து பருவமழை அளவு மாவட்டத்தில் குறைந்ததால், கிணற்று பாசனம் மூலமும் விவசாயம் செய்வது

கேள்விக்குறியாகியுள்ளது. இவ்வாண்டு மே மாதத்தில் பெய்த கோடை மழை காரணமாக கோமுகி மற்றும் மணிமுக்தா அணைகளில் நீர் மட்டம் ஓரளவிற்கு உயர்ந்தது. இது பொதுமக்களுக்கு நம்பிக்கையை கொடுத்தது.

அதைத் தொடர்ந்து ஜூன் மாதம் தாமதமாக துவங்கிய தென் மேற்கு பருவமழை, எதிர்பார்த்தபடி பெய்யாமல் போக்கு காட்டி வருகிறது. அவ்வப்போது லேசாக பெய்த மழை நீர்நிலைகள் நிரம்புவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இதனால் கிராமப் புறங்களில் உள்ள ஏரி, குளம், குட்டைகள் கோடை காலத்தை போல் வறண்டு பரிதாபமாக காட்சியளிக்கிறது.
நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டதால், கிணற்றை ஆழப்படுத்த வேண்டிய நிர்பந்தத்தில் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். பயிரை காப்பாற்ற வேறு வழியின்றி கடன் வாங்கி கிணற்றை தோண்டும் பணியில் விவசாயிகள் சிலர் ஈடுபட்டுள்ளனர். இருப்பினும் எதிர்பார்த்த அளவு நிலத்தடி நீர், ஊற்றெடுக்காமல், ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது. விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்டுள்ள பலரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட கிழக்கு பருவமழை துவங்க இன்னும் ஒரு சில வாரங்களே உள்ள நிலையில் இதுவரை தென்மேற்கு பருவமழையால் எந்த பலனும் கிடைக்காமல் மக்கள் பரிதவித்து வருகின்றனர். கடந்த 3 ஆண்டை போலவே, தென்மேற்கு பருவமழை ஏமாற்றி வருவது விவசாயிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ஓராண்டு பயிர்களான கரும்பு, மஞ்சள், மரவள்ளி சாகுபடி செய்தவர்கள் செய்வதறியாது தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.
நாளுக்கு நாள் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதியில் நீர்வளம் குறைந்து வருவதால் சில இடங்களில் குடிநீர் பிரச்னையும் தலை தூக்கியுள்ளது. இது கோடையில் இன்னும் அதிக பாதிப்பை ஏற்படுத்தும்

அபாயமும் உள்ளது. வரும் வாரங்களிலாவது பரு வமழை அளவு அதிகரித்து நீர் நிலைகள் நிரம்ப வேண்டும் என்பது அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## சந்தைப்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

கோபி: வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை விரிவாக்க சீரமைப்பு திட்டம் சார்பில், சந்தைப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டு பொருட்களாக மாற்றுவது குறித்து செயல்விளக்க பயிற்சி, கோபியில் நேற்று நடந்தது. உணவு பதப்படுத்தும் பயிற்சியாளர் ஆனந்தன், வேளாண் அலுவலர் (வேளாண் வணிகம்) கார்த்திகேயன், உழவர் சந்தை நிர்வாக அலுவலர் கணேசன் உட்பட பலர் பங்கற்றனர்.

வேளாண் வணிக துணை இயக்குனர் சுப்பிரமணியன் தலைமை வகித்து பேசியதாவது: விவசாயிகளுக்கு கடன் தர, எந்த வங்கிகளும் முன் வருவதில்லை. இதனால் விவசாயம் ஒரு கவுரவமான தொழில் இல்லாமல் போகிறது. விஞ்ஞான வளர்ச்சிக்கு தகுந்தாற்போல், நாம் விவசாயம் செய்யவில்லை எனில், விவசாயம் செய்யும் பரப்பளவு குறைந்துவிடும். விவசாய பணியில் ஈடுபடாதவர்கள், 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்துக்கு சென்று விடுகின்றனர். எனவே, விவசாய பணிக்கு ஆட்கள் கிடைப்பது, சிரமமாக உள்ளது. தவிர, ஒழுங்குமுறை விற்பனை கூடம் பக்கம், விவசாயிகள் எவரும் வருவதில்லை. தேங்காய் பருப்புக்கு மட்டுமே மார்க்கெட் நடக்கிறது. இந்த சூழலில் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் எனில், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்ற வேண்டும்' என்றார்.

## கோடை மழையால் குளிர்ந்த சத்தி: 'நிறைந்தது' தடுப்பணைகள்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில், கடந்த சில நாட்களாக பெய்த கோடை மழையால், வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டுள்ளது. வனப்பகுதியில் பெய்த மழையால், தடுப்பு அணைகள் நிறைந்துள்ளது.

சத்தியமங்கலம் பகுதியில், கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக, கடும் வெப்பம் வீசியது. இதனால், விவசாய கிணறுகளில் நீர் மட்டம் கீழ்நோக்கி சென்றது. பல இடங்களில் வயல்வெளிகளில், விவசாய பயிர்கள் வறண்டுபோகும் நிலைக்கு தள்ளப்பட்டது. தவிர, தொடர் வெப்பத்தால், வயல்வெளிகளில் பணியாற்றும் மக்கள் முதல், பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் வரை பாதிக்கப்பட்டனர். வனப்பகுதியில் குளம், குட்டைகளில் இருந்த தண்ணீர் குறைந்ததால், வனவிலங்குகளுக்கு தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது. இதனால், வனப்பகுதிகளை விட்டு யானை கூட்டங்கள், கிராமங்களை நோக்கி படையெடுக்க தொடங்கியது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக, சத்தியமங்கலம் மற்றும் மலைப்பகுதிகளிலும், மலைப்பகுதிகளில் உள்ள வனப்பகுதிகளிலும், கோடைமழை பெய்தது. கடும் வெயிலால் தவித்த சத்தியமங்கலம் பகுதி மக்களுக்கு, இந்த கோடைமழை மகிழ்ச்சியை அளித்துள்ளது. இதனால், வறண்டு கிடந்த வயல்வெளிகளில் மழைநீர் தேங்கி நின்றது. திம்பம் மற்றும் கடம்பூர் மலைப்பகுதியிலும், பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையால், வனப்பகுதியில் உள்ள குளம், குட்டைகளில் தண்ணீர் தேங்கி நிற்கிறது.

## முருங்கை விலை உயர்வு

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தையம், மார்க்கம்பட்டி மற்றும் சுற்றி உள்ள கிராமப் பகுதிகளில் விளைந்த முருங்கைக்காய் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. செடி, கரும்பு,

மரம் ஆகிய முருங்கை வரத்து காணப்பட்ட போதிலும், செடி முருங்கை வரத்துதான் அதிகமாக உள்ளது.

மற்ற வகைகளை காட்டிலும் செடிமுருங்கை சுவையாக இருப்பதால் இதன் விலை அதிகமாக உள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்பு ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.9க்கு விற்றது. நேற்று ரூ.18க்கு விற்றது. வியாபாரி ஒருவர் கூறுகையில் ""முருங்கை விலை மட்டுமே அதிகரித்துள்ளது. மற்ற காய்களின் விலையில் மாற்றம் இல்லை," என்றார்

**நீர்நிலைகளை ஆக்கிரமித்துள்ள கருவேல மரங்களால்...நிலத்தடி நீர்மட்டம் பாதிப்பு வேரோடு அகற்ற நடவடிக்கை வேண்டும்**



அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டையை சுற்றியுள்ள கிராம கண்மாய்கள், குளம் உள்ளிட்ட நீர்நிலைகளில் கருவேல மரங்கள் ஆக்கிரமித்து அடர்ந்து வளர்ந்துள்ளன. தேங்கும் சிறிதளவு நீரையும் அவை உறிஞ்சுவதால் நிலத்தடி நீர்மட்டம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. வடகிழக்கு பருவமழை துவங்கும் முன் அவற்றை வேரோடு அகற்ற சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாய நிலங்கள் மழையின்றி தரிசாக கிடந்ததால் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 1960களில் வெளிநாடுகளில் இருந்து சீமை கருவேல விதைகள் கொண்டுவரப்பட்டு "ஹெலிகாப்டர்' மூலம் தமிழகம் முழுவதும் தூவப்பட்டன. அவற்றை மரங்களாக வளர்த்து வெட்டி விறகு வியாபாரம், கரிமூட்டமும் போட்டு தொழில் செய்தனர்.

அவை பறவைகள் மற்றும் காற்று மூலம் அனைத்து இடங்களிலும் முளைத்து செடியாகவும், மரங்களாகவும் காட்சி அளிக்கிறது. புறம்போக்கு நிலங்கள், தரிசான விவசாய நிலங்கள், நீர்நிலைகளில் பரவி காணப்படுகிறது.

இதனால் மண்வளம் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது. இவை நிலத்தடி நீரை முற்றிலும் உறிஞ்சி பெருமளவில் ஆக்சிஜனை உள்வாங்குகிறது.

இதனால் வெப்பம் அதிகரித்து மழை பெய்ய விடாமல் தடுக்கிறது. அருப்புக்கோட்டை ஒன்றியத்திற்கு உட்பட்டு 32 ஊராட்சிகள், ஒரு நகராட்சியும் உள்ளது. இவற்றில் அரசு பொதுப்பணித்துறை, ஒன்றியம், ஊராட்சியை சேர்ந்த கண்மாய்கள், குளம் உள்ளிட்ட நீர்நிலைகளில் கடந்த 40 ஆண்டுகளுக்கு முன் கரை மேடுகளில் பயன் தரும் மரக்கன்றுகளை நட்டு பராமரித்தல், கண்மாய்களை தூர் வாருதல், நீர்வரத்து கால்வாய்களை சீரமைத்தல் உட்பட பணிகள் செய்யப்பட்டன.

காலப்போக்கில் இப்பணிகளை செய்யாததால் கருவேல மரங்கள் வேரூன்றி நன்கு வளர்ந்து விட்டன. இவை காற்றில் உள்ள ஈரப்பதத்தை கூட ஈர்த்து விடும் சக்தி படைத்தது. இவை இருக்கும் இடத்தில் எந்த தாவரமும் வளராது. இதனால் நீர்நிலைகளில் சிறிதளவு நீரை கூட சேமிக்க முடிவில்லை. நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டு அதலபாதாளத்திற்கு சென்று குடிநீர், விவசாய பாசனத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அனைத்து கண்மாய்கள், ரோடு ஓரங்கள், நீர் பிடிப்பு பகுதிகள், தனியார் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களில் பயன் தரும்

மரங்களை வளர்க்க வேண்டும். மண், நீர் வளத்தை பாதுகாக்க வேண்டும். வடகிழக்கு பருவமழை துவங்கும் முன் நீர்நிலைகளில் உள்ள கருவேல மரங்களை வேருடன் அகற்றி நீரை சேமிக்க வழிவகை செய்ய வேண்டும். இவற்றை அகற்ற மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சுக்கிலநத்தம் ஊராட்சி தலைவர் கண்ணன், ""அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் கண்மாய் பகுதிகளில் கருவேல மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ளன. அதிகாரிகள் முழு முனைப்புடன் செயல்பட்டால் மட்டும் இவற்றை அகற்றி குடிநீர், பாசனத்திற்கான நீரை சேமிக்க முடியும்.

மருத்துவ குணம் கொண்ட செடிகள் மற்றும் பலன் தரும் மரக்கன்றுகளை நீர் நிலைகளை சுற்றி நட்டு வளர்க்கலாம்.

பொது நல அமைப்புகள் கண்மாய்களை தத்தெடுத்து பராமரிப்பு செய்ய வேண்டும்,"என்றார்.

### இயற்கை வேளாண்மை கருத்தரங்கம்

புதுச்சேரி: புதுச்சேரி பிரதேச நம்மாழ்வார் இயற்கை உழவர் சங்கம் சார்பில் இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் வில்லியனுார் ஆனந்தராஜா திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. இணை செயலாளர் ராமலிங்கம் வரவேற்றார். சங்க தலைவர் வேணுகோபால் தலைமை தாங்கினார். வேளாண்மைத் துறை இயக்குனர் ராமமூர்த்தி,தோட்டக்கலை கூடுதல் வேளாண் இயக்குனர் ஜெயசங்கர், கோவில்பட்டி நடமாடும் மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் செல்வம் சிறப்புரையாற்றினர். இயற்கை விவசாய சாகுபடி, பூச்சுகள் கட்டுப்படுத்தும் வழிகள் குறித்து விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர். பூச்சியியல் வல்லுநர் விஜயகுமார்

உட்பட பலர் கலந்து கொண்டனர். இணை செயலாளர் பாக்கியவதி நன்றி கூறினார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தென்மேற்குப் பருவ மழை: தமிழகம், புதுவையில் குறைவு**

தமிழகம், புதுச்சேரியில், தென்மேற்குப் பருவ மழை வழக்கத்தை விட சிறிது குறைவாகப் பதிவாகியுள்ளது.

தென்மேற்குப் பருவ மழை காலம், நாட்டின் பெரும்பாலான பகுதிக்கு, கணிசமான மழையைக் கொடுக்கும் முக்கிய காலமாகும். ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான நான்கு மாத காலத்தில் தமிழகத்துக்கு அதிகளவு மழை கிடைக்காது.

இருப்பினும், சராசரியாக 22 முதல் 23 செ.மீட்டர் அளவுக்கு மழை பெய்யும்.

நிகழாண்டில், தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில், வழக்கத்தை விட, சிறிது குறைவாகப் பதிவாகியுள்ளது. தமிழகத்தில், கோவை, பெரம்பலூர், சிவகங்கை, தேனி ஆகிய நான்கு மாவட்டங்களில் இயல்பை விட கூடுதலாக மழை பெய்துள்ளது. அதே நேரத்தில், காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாமக்கல், புதுக்கோட்டை, தஞ்சை, திருச்சி, விருதுநகர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில், வழக்கத்தை விட குறைவாக மழை

பெய்துள்ளது. தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில், தமிழகத்தில் சராசரி மழைப் பொழிவை விட 5 சதவீதம் அளவுக்கு குறைவாகப் பெய்துள்ளது. அதேபோல், அண்டை மாநிலமான புதுச்சேரியிலும், வழக்கத்தை விட 11 சதவீதம் அளவுக்கு குறைவாக மழை பெய்துள்ளது.

இந்தக் காலத்தில், கேரளம், கர்நாடகத்தில் பொழியும் மழையளவைப் பொருத்தே, தமிழகத்திலுள்ள பல அணைகளுக்கு நீர் கிடைக்கிறது. இந்தாண்டு தென்மேற்குப் பருவ மழை, கேரளம், கர்நாடகத்தில் எதிர்பார்த்த அளவுக்கு பெய்யாததால், தமிழக அணைகளுக்கு கிடைக்க வேண்டிய நீரும் கிடைக்கவில்லை.தமிழகம்: வழக்கமாகப் பெய்யும் மழையளவு(மி.மீ) 229.5, பெய்த மழையளவு(மி.மீ) 218.3 .

புதுச்சேரி: வழக்கமாகப் பெய்யும் மழையளவு(மி.மீ) 266.8, பெய்த மழையளவு(மி.மீ) 238.7.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் குறைந்தது



மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 2,807 கன அடியாகக் குறைந்தது.

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாகக் குறைந்து வருகிறது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை அணையின் நீர்வரத்து நொடிக்கு 4,370 கன அடியாக இருந்தது, ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 2,807 கன அடியாகக் குறைந்தது. இதைத் தொடர்ந்து, அணையின் நீர்மட்டம் 79.21 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 15,701 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 41.17 டி.எம்.சி.யாக இருந்தது.

## மரங்கள் கணக்கெடுப்பு நடத்த வேண்டும்: தில்லி அரசு

தில்லி வளர்ச்சி ஆணையம் (டிடிஏ), உள்ளாட்சி அமைப்புகள் தங்களது அதிகாரத்துக்கு உள்பட்ட பகுதிகளில் மரங்கள் கணக்கெடுப்பு நடத்துமாறு தில்லி அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக தில்லி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஆசிம் அகமது தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் கலந்து கொண்டன.

இதுகுறித்து அரசு உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: மரங்களைப் பாதுகாப்பதற்கான அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மக்களின் பங்களிப்புடன் பசுமைப் பகுதிகளை உருவாக்கவும் இந்த மரங்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

அப்போது மரங்கள் குறித்த விரிவான தகவல்கள் பதிவு செய்யப்படும். ஒவ்வொரு மரத்துக்கும் தனித்தனியே எண் அடையாளம் இடப்பட்டு, அவற்றின் உயரம், வயது, வளர்ச்சி குறித்த தகவல்கள் சேகரிக்கப்படும்.

கணக்கெடுப்பின் போது, ஏதேனும் மரங்களின் வளர்ச்சியில் பாதிப்பு இருப்பதாகத் தெரியவரும் பட்சத்தில், தீர்வுகாண நடவடிக்கைக்குப் பரிந்துரைக்கப்படும். உதாரணமாக, ஒரு மரத்தின் அடிப்பகுதியில் கான்கிரீட் போடப்பட்டிருந்தால், அதை அகற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படும்.தலைநகரில் 3 சதவீதத்தை தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டிருக்கும் புது தில்லி முனிசிபல் கவுன்சில், தனது பகுதியில் மரங்கள் கணக்கெடுப்பு நடத்தி வருகிறது. இதைத் தொடர்ந்து, தங்கள் பகுதிகளில் உள்ள மரங்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்துமாறு இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கும், டிடிஏவுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எண் அடையாளம் இடப்படும் பட்சத்தில் ஒரு மரத்தை எளிதாக அடையாளம் காண இயலும். தகவல்கள் அனைத்தும் சரியான முறையில் சேகரிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய திடீர் ஆய்வுகளும் நடத்தப்படும் என்று அந்த அதிகாரி கூறினார்.2014-15 காலகட்டத்துக்கான பொருளாதாரக் கணக்கெடுப்பின்படி, தில்லியில் 297.81 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு பசுமைப் பகுதியாக உள்ளது. இது, தில்லியின் மொத்தப் பரப்பளவில் 20.08 சதவீதமாகும்.

## பருப்பு வகைகள் விலை கடும் உயர்வு



வட மாநிலங்களில் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால், சென்னையில் துவரம் பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகளின் விலை வெகுவாக அதிகரித்து வருகிறது. தமிழகத்திற்கு மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம், மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து துவரம் பருப்பு விற்பனைக்காக கொண்டு

வரப்படுகிறது. தற்போது இந்த மாநிலங்களில் இதுவரை இல்லாத அளவுக்கு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் தமிழகத்துக்கு பருப்பு வரத்து குறைந்துள்ளது.

இதனால், துவரம் பருப்பு விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இது குறித்து சென்னையைச் சேர்ந்த மளிகைக் கடை வியாபாரி மாரித்தங்கம் கூறியதாவது: கடந்த ஆண்டு (2014) அக்டோபரில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.85 முதல் ரூ.100 வரை விற்பனையானது. அதைத் தொடர்ந்து வந்த மாதங்களில் தமிழகத்துக்கு கொண்டுவரப்படும் துவரம்பருப்பு வரத்து படிப்படியாகக் குறைந்தது. இதனால் அதன் விலை தற்போது இருமடங்காக அதிகரித்து விட்டது. துவரம் பருப்பின் விலை ரூ. 150 ஆக அதிகரிப்பு: கடந்த மாதம் கிலோ ரூ.135-க்கு விற்பனையான துவரம் பருப்பு சில்லறை விலையில் தற்போது ரூ. 150-க்கும், பாக்கெட்டில் விற்கப்படும் துவரம்பருப்பு ரூ.150-இல் இருந்து ரூ. 160-ஆகவும் விலை அதிகரித்துள்ளது. இதேபோல் ரூ.130-க்கு விற்பனையான உளுந்தம் பருப்பு ரூ.150-ஆகவும், ரூ.70-க்கு விற்பனையான கடலைப் பருப்பு ரூ.85 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. இருப்பினும் பாசிப்பருப்பின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை. இதனால் கடந்த மாதம் ரூ.120-க்கு விற்கப்பட்ட பாசிப்பருப்பு தற்போது அதே விலையில் தொடர்ந்து நீடிக்கிறது.

அடுத்து வரும் வாரங்களில் சுபமுகூர்த்த தினங்கள், கோயில் விழாக்கள் நடைபெறவுள்ளதால் பருப்பு உள்ளிட்ட மளிகைப் பொருள்களின் விலை சற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றார் மாரித்தங்கம். எண்ணெய் வகைகள்: இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து பாமாயில் இறக்குமதி செய்யப்படுகிறது. இதனால் ஒரு லிட்டர் பாமாயில் ரூ. 45-லிருந்து

ரூ. 48, சூரியகாந்தி எண்ணெய் (முதல் தரம்) ரூ. 78-லிருந்து ரூ. 83, சூரியகாந்தி எண்ணெய் ஆயில் ( 2-ஆம் தரம்) ரூ. 68லிருந்து ரூ. 74, கடலை எண்ணெய் ரூ. 100-லிருந்து ரூ. 110 விலை உயர்ந்துள்ளது. தேங்காய் எண்ணெய் ஒரு லிட்டர் ரூ. 190-லிருந்து ரூ. 160, தேங்காய் எண்ணெய் (2-ஆம் ரகம்) ரூ. 160-லிருந்து ரூ.140, அக்மார்க் நல்லெண்ணெய் ரூ.220-லிருந்து ரூ.190, வனஸ்பதி ரூ.90லிருந்து ரூ.80, விளக்கேற்றும் நல்லெண்ணெய் ரூ.100லிருந்து ரூ.75 ஆகவும் விலை குறைந்துள்ளது.

## தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு வரவேற்கத்தக்கது: மத்திய அமைச்சர்



சென்னையில் நடந்த உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு வரவேற்கத்தக்கது என்று மத்திய சிறு குறு தொழில் துறை அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா தெரிவித்தார்.

புதுச்சேரியில் திங்கள்கிழமை நடைபெறும் தொழில் முனைவோர் கருத்தரங்கு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மத்திய சிறு குறு தொழில் துறை அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா விமானம் மூலம் ஞாயிற்றுக்கிழமை சென்னைக்கு வந்தார். அங்கிருந்து காரில் காஞ்சிபுரம் வந்த அவர், காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலில் குடும்பத்துடன் தரிசனம் செய்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:
தொழில் துறை வளர்ச்சியே நாட்டின் முக்கிய வளர்ச்சி. அதனால் சிறு தொழில்களை வளரவிட வேண்டும். அதற்கு பாஜக உறுதுணையாக இருக்கும். தமிழகம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் தொழில் துறை சார்பில், தகவல் மையங்கள் திறக்கப்பட்டு தொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும்.
உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் நடந்தது வரவேற்கத்தக்கது. இந்த மாநாட்டில் முதலீட்டாளர்கள் ஒன்றுகூடி பல்வேறு விஷயங்களை ஆராய்ந்து தொழில் வளர்ச்சிக்கான காரணங்களை கண்டுபிடித்து சிறப்பு செய்துள்ளனர். தொழில் வளர்ச்சிக்கு இந்த மாநாடு உதவிகரமாக இருக்கும். அதேபோல் புதிய யுக்திகள் இந்த மாநாட்டின் மூலம் கிடைக்கும். இதனால், தொழில் அபரிமிதமான வளர்ச்சி பெறும்.
இதேபோல பிற மாநிலங்களிலும் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்த வேண்டும். அதன் மூலம் நாட்டில் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். இதனால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தொழில் துறை சார்ந்த வளர்ச்சி மூலம் நாடு பிரதான இடத்தைப் பிடிக்கும் என்றார் மத்திய அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா.
பேட்டியின்போது, காஞ்சிபுரம் நகர பாஜக தலைவர் பெருமாள் உள்பட பலர் இருந்தனர்.

**கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பேரிடர் மேலாண்மைப் பயிற்சி**

திருவள்ளூர் மாவட்டத்தில் கடலோரக் கிராமங்களில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சியை மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் அண்மையில் தொடக்கி வைத்தார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, திருவொற்றியூர் ஆகிய வட்டங்களில் கடலோரக் கிராமங்கள் உள்ளன. இங்கு பணிபுரியும் 50 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சி வெள்ளிக்கிழமை தொடங்கியது.

பயிற்சியை மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தொடக்கி வைத்துப் பேசியதாவது:

கடலோரக் கிராமங்களில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்கள், அவர்கள் பணிபுரியும் கிராமத்தில் அவர்களுக்கென கட்டப்பட்ட குடியிருப்பு அலுவலகத்தில் தங்கிப் பணிபுரிய வேண்டும்.

பேரிடர் நிகழ்வு காலங்களின் பயன்பாட்டுக்காக கிராம நிர்வாக அலுவலர்கள், அவர்கள் பணிபுரியும் கிராமத்தின் ஊராட்சித் தலைவர், செயலர், முக்கியப் பிரமுகர்கள், தன்னார்வலர்கள் ஆகியோரின் செல்லிடப்பேசி, தொலைபேசி விவரங்கள், மரம் அறுக்கும் இயந்திரம், புல்டோசர், பொக்லைன் இயந்திரம் ஆகியவை வைத்திருக்கும் உரிமையாளர்களின் விவரங்கள், தீயணைப்புத் துறை, சுகாதாரத் துறை, மீன்வளத் துறை, காவல் துறை, பொதுப்பணித் துறை, கால்நடை பராமரிப்பு துறை, மின் துறை ஆகிய துறை அலுவலர்களின் பெயர், செல்லிடப்பேசி, தொலைபேசி ஆகியவை அடங்கிய கையேடை தயாரித்து வைத்திருக்க வேண்டும்.

மேலும், பேரிடர் நேரங்களில் கிராம நிர்வாக அலுவலர்கள் தாங்கள் பணிபுரியும் கிராமங்களிலேயே தங்கி முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டு பேரிடரால் மக்களுக்கும், கால்நடைகளுக்கும் எற்படும் பாதிப்பைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.பயிற்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முத்துசாமி, பேரிடர்

மேலாண்மை வட்டாட்சியர் செங்கலா, கிராம நிர்வாக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தேனீ வளர்ப்புக்கு இலவசப் பயிற்சி

கனரா வங்கியின் சுயவேலை பயிற்சி நிலையத்தில், செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் தேனீ வளர்ப்புக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

இது குறித்து, பயிற்சி மையத்தின் இயக்குநர் எம். முருகராஜ் தெரிவித்தது: 2015-16 ஆம் ஆண்டில், 29 வகையான பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, தேனீ வளப்புக்கான பயிற்சி வகுப்புகள் செப்டம்பர் 15ஆம் தேதி முதல் நடைபெறவுள்ளது. பயிற்சி முடித்தவர்களுக்கு, வங்கிக் கடன் உதவி பெற பரிந்துரை செய்யப்படும்.

எட்டாம் வகுப்பு வரை படித்துள்ள 18 முதல் 45 வயதுக்குள்பட்டவர்கள் இப்பயிற்சி வகுப்புகளில் பங்கேற்கலாம். இது முற்றிலும் இலவசமாக நடத்தப்படுகிறது.இதில் சேர விருப்பமுள்ளவர்கள், குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் நகல்களுடன், மார்பளவு புகைப்படம் (3) ஆகியவற்றுடன், இயக்குநர், கனரா வங்கி ஊரக சுயவேலை வாய்ப்புப் பயிற்சி மையம், 83-ஏ. முதல் மாடி, டிஎம்எஸ்எஸ்எஸ் கட்டடம், நேருஜி நகர், திண்டுக்கல் என்ற முகவரிக்கு நேரடியாக வரவேண்டும்.

கூடுதல் விவரங்களுக்கு, 94426-28434, 99408-35147, 88700-76537, 0451-2434034 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## இயந்திர நேரடி நெல் விதைப்புக்கு மானியம்

சிவகங்கை மாவட்டத்தில் இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்புக்கு மானியம் வழங்கப்படுவதாக வேளாண் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சிவகங்கை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தனபாலன் கூறியது: சிவகங்கை வட்டம் சோழபுரம், நாலுகோட்டை, சுந்தரநடப்பு, மாங்குடி, ஆலங்குளம், வேம்பங்குடி போன்ற கிராமங்களில் இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயந்திரம் மூலம் நேரடி விதைப்பு செய்வதால் விதை அளவு குறைகிறது.

மேலும் பயிர் எண்ணிக்கை சரியான விகிதத்தில் பராமரிக்கப்படும். குறிப்பிட்ட இடைவெளியில் விதை விதைப்பதால் களை எடுப்பது, பயிர் பாதுகாப்பது எளிதாக இருக்கும். இத்திட்டத்திற்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.5 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

அதில், ரூ.2,455க்கு விதை, நுண்ணூட்ட உரம், உயிர் உரம் போன்றவை வட்டார வேளாண் விரிவாக்க மையம் மூலம் வழங்கப்படும். ரூ.2,545க்கு விதைக்கும் கருவிக்கான வாடகை, களைக்கொல்லி வாங்கியதற்காக விவசாயிகள் வங்கி கணக்கில் மானியமாக வழங்கப்படும்.

ஒரு விவசாயி அதிகபட்சம் 2 ஹெக்டேருக்கு மானிய உதவி பெறலாம். அதனால், சிவகங்கை வட்டார விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

### "விளைநிலங்களை அடுத்த தலைமுறைக்காக பாதுகாக்க வேண்டும்'

தமிழகத்தில் விளைநிலங்களை விற்காமல், விவசாயம் செய்வதற்கு நிலத்தை அடுத்த தலைமுறையினருக்குப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் என்று மதுரை குளோபல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபாரின் டிரேட் நிறுவனத்தின் இயக்குநர் ஜி.ராஜமூர்த்தி பேசினார்.

காங்கயம் தாலுகா அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம், புதிய நிர்வாகிகள் தேர்வு ஞாயிற்றுக்கிழமை காங்கயத்தில் நடைபெற்றது.

இதற்கு, ஈரோடு மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் கே.பி.சக்திவேல் தலைமை வகித்தார். அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் முன்னாள் மாநில சம்மேளனத் தலைவர் கே.எஸ்.ஜெகதீசன், காங்கயம் தாலுகா தலைவர் எஸ்.பழனிச்சாமி,

திருப்பூர் மாவட்டத் தலைவர் எம்.ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மதுரை குளோபல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபாரின் டிரேட் நிறுவனத்தின் இயக்குநர் ஜி.ராஜமூர்த்தி பேசியது:

வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. சீனா உள்ளிட்ட வெளிநாடுகளில் நடைபெறும் உணவுப்பொருள் வர்த்தகக் கண்காட்சியில் அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் கலந்து கொள்வதற்கு அரசு மானியம் வழங்கிறது. காங்கயத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதற்கான அமைப்பை உருவாக்க வேண்டும். வரும் ஆண்டுகளில் ஆப்பிரிக்க-ஐரோப்பிய நாடுகளில் அரிசிக்கான தேவை அதிகம் உள்ளது. எனவே, தமிழகத்தில் விளைநிலங்களை விற்காமல் விவசாயம் செய்வதற்கு நிலத்தை அடுத்த தலைமுறையினருக்கு பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் காங்கயம் தாலுகா அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்திற்கான புதிய நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்கத்தின் தலைவராக எஸ்.பழனிச்சாமி, செயலாளராக எஸ்.சாமியப்பன், பொருளாளராக டி,சின்னச்சாமி, துணைத் தலைவர்களாக டி.எஸ்.ஆர்.கே.செல்லமுத்து, மு,பாலசுப்பிரமணியன், கே.துரைராஜ், சி.ஈஸ்வரமூர்த்தி ஆகியோரும், துணைச் செயலாளர்களாக கே.முத்துச்சாமி, ஏ.சண்முகசுந்தரம், எம்.சிவப்பிரகாசம், பி.தினேஷ்குமார் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டத்தில் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் ஈரோடு தாலுகா தலைவர் பாலகிருஷ்ணன் உள்பட சங்கத்தின் தாராபுரம், அவிநாசி, ஊத்துக்குளி பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஊட்டச்சத்து விழிப்புணர்வுப் பேரணி

அரூர் அருகே, வாச்சாத்தியில் ஊட்டச்சத்து விழிப்புணர்வுப் பேரணி அண்மையில் நடைபெற்றது.

வாச்சாத்தி அரசு மலைவாழ் பழங்குடியினர் நல உண்டு உறைவிட தொடக்கப் பள்ளி சார்பில், நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியை, பேதாதம்பட்டி ஊராட்சித் தலைவர் பாஞ்சாலை வெங்கடாசலம் தொடக்கிவைத்தார்.

ஊட்டச் சத்துள்ள உணவுப் பொருள்கள், ஊட்டச்சத்து குறைவால் ஏற்படும் நோய்கள், பாதுகாப்புக் முறைகள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் கையில் ஏந்திப் பேரணியில் சென்றனர்.

பள்ளித் தலைமை ஆசிரியர் ஆர்.கோவிந்தசாமி, உதவி ஆசிரியர் எஸ்.சின்னசாமி, பெற்றோர், ஆசிரியர் கழக ஆசிரியர்கள் கே.சதீஸ்வரன், எம்.ரேவதி மற்றும் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**உறுதிமொழி ஏற்பு**

தருமபுரி அருகே மூக்கனஅள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில், உலக ஊட்டச்சத்து வார நாள் உறுதிமொழி ஏற்பு, வ.உ.சி. பிறந்த தினம், ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது.

பள்ளியின் தேசிய பசுமைப்படை அமைப்பின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, தலைமை ஆசிரியர் டி.ரவிக்குமார் தலைமை வகித்தார். பட்டதாரி ஆசிரியை யமுனாபாய் முன்னிலை வகித்தார்.

பள்ளி மாணவ, மாணவியர் ஊட்டச்சத்து வாரநாள் உறுதிமொழி ஏற்றனர். ஆசிரியை மோகனசுந்தரி வரவேற்றார். ஏற்பாடுகளை தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் மு.கா.நெடுமாறன் செய்தார்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் குறைந்தது

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 2,807 கன அடியாகக் குறைந்தது.

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாகக் குறைந்து வருகிறது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை அணையின் நீர்வரத்து நொடிக்கு 4,370 கன அடியாக இருந்தது, ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 2,807 கன அடியாகக் குறைந்தது.

இதைத் தொடர்ந்து, அணையின் நீர்மட்டம் 79.21 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 15,701 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 41.17 டி.எம்.சி.யாக இருந்தது.

**தொடர் மழை: ரப்பர் பால்வடிப்பு முடக்கம்**

குமரி மாவட்டத்தில் பெய்யும் தொடர் மழை காரணமாக கடந்த ஒரு வாரமாக ரப்பர் பால்வடிப்புத் தொழில் நடைபெறவில்லை.

ரப்பர் தோட்டத் தொழிலை நம்பியுள்ள கன்னியாகுமரி மேற்கு மாவட்டப் பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக தொடர் மழை பெய்து வருகிறது. இந்த மழையினால் ரப்பர் மரங்களிலிருந்து பால் வடிப்பு செய்யப்படுவதும் முற்றிலும் முடங்கியுள்ளது. இதனால் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும், ரப்பர் விவசாயிகளுக்கும் வருவாய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி தமிழகத்தில் மழை பெய்யுமா?




சென்னை,

வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. இதனால் தமிழகத்தில் மழை பெய்யுமா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

<u>வெப்பச்சலனம்</u>

வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. தென்மேற்கு பருவமழை கர்நாடகா, கேரளா,

ஆந்திரா மற்றும் மராட்டியம் ஆகிய மாநிலங்களில் தீவிரம் அடைந்துள்ளது.

இந்தநிலையில் அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் மழை பெய்யும் என்றும், வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வு பகுதி

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

வங்கக்கடலின் மேற்கு மத்திய மற்றும் வடமேற்கு பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. ஆனால் இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்னும் வலுவடையவில்லை. ஓரிரு தினங்களில் வலுவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வலுவடைந்த பின்னரே எந்த திசை நோக்கி நகர்கிறது என்பதை வைத்து, தமிழகத்தில் மழை பெய்யுமா? என்பதை சொல்ல முடியும். தொடக்க நிலையில் இருப்பதால் புயல் சின்னமாக உருவெடுக்குமா? என்பதையும் தற்போது உறுதிப்படுத்த முடியாது.

மழை பெய்யும்

வெப்பச்சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் ஒருசில இடங்களில் இன்று (திங்கட்கிழமை) மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தொழுதூரில் 3 செ.மீ. மழை

நேற்று காலை 8.30 மணியோடு நிறைவடைந்த 24 மணி நேர நிலவரப்படி தமிழகத்தில் பதிவாகிய மழை அளவு வருமாறு:–

கடலூர் மாவட்டம் தொழுதூரில் அதிகபட்சமாக 3 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. காட்டுமன்னார் கோவில், மங்கலாபுரத்தில் தலா 2 செ.மீ.,

சீர்காழி, நத்தம், ராசிபுரம் மற்றும் திண்டுக்கல்லில் தலா 1 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

## பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து அதிகரிப்பு செவ்வாழை ரூ.1100–க்கு விற்பனை



பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து அதிகரித்துள்ளது. இதில் ஒரு செவ்வாழைத்தார் ரூ.1100 விற்பனையானது.

<u>வாழைத்தார்</u>

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை, புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்துக்கு ஆனைமலை, பொள்ளாச்சி மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வாழைத்தார்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாழைத்தார் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு மொத்தம் 1400 வாழைத்தார்கள் வந்தன. இதில் பூவந்தார் ஒன்று ரூ.200 முதல் ரூ.600 வரையும், மோரீஸ் ரூ.100 முதல் ரூ.300 வரையும், செவ்வாழைத்தார் ரூ.300 முதல் ரூ.1100 வரையும், கற்பூர வள்ளி ரூ.150 முதல் ரூ.550 வரையும், கதளி ஒரு கிலோ ரூ.40–க்கும், நேந்திரம் ஒரு கிலோ ரூ.30–க்கும் விற்பனையானது.

<u>விலை அதிகரிப்பு</u>

இது குறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

பொள்ளாச்சி மார்க்கெட்டில் கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்துக்கு மொத்தம் 1000 வாழைத்தார்கள் மட்டுமே விற்பனைக்கு வந்தன. ஆனால் இந்த வாரம் நடந்த ஏலத்துக்கு 1400 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. எப்போதும் வாழைத்தார்கள் அதிகமாக வந்தால் விலை குறையும். ஆனால் இந்த வாரம் அதற்கு நேர்மாறாக விலை அதிகரித்தது. விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் ஆவணி மாத கடைசி திருமண முகூர்த்த நாள் என்பதால் தான் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தைவிட ஒரு வாழைத்தார் விலை சராசரியாக ரூ.100 முதல் ரூ.150 வரை அதிகரித்தது.

<u>ரூ.1100–க்கு ஏலம்</u>

மேலும் இந்த ஏலத்தில் செவ்வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.1100–க்கு ஏலம் சென்றது. எப்போது ஒரு தார் ரூ.900–க்கு மேல் ஏலம் போனது கிடையாது. முதல் தடவையாக ரூ.1100–க்கு விற்பனையாகி உள்ளது ஆச்சரியாக உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## பொள்ளாச்சியில் பெரிய வெங்காயம் விலை குறைகிறது



பொள்ளாச்சியில் பெரிய வெங்காயம் விலை குறைந்து வருகிறது.

பெரிய வெங்காயம்

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு தினமும் புனே, பெங்களூரு, நாசிக் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து பெரிய வெங்காயம் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தினமும் சுமார் 250 டன் வெங்காயம் விற்பனைக்கு வருகிறது.

இங்கிருந்து உள்ளூர் வியாபாரிகள் மற்றும் கேரள வியாபாரிகளும் வாங்கி செல்கிறார்கள். இங்கு வெங்காயம் தரம் பிரித்து விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த 2 வாரங்களுக்கு முன்பு மொத்த விற்பனையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.60-க்கு விற்கப்பட்டது. சில்லறை விலையில் ரூ.65 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டது.

விலை குறைகிறது

இந்த நிலையில் தற்போது விலை குறைந்து வருகிறது. இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது:-

வட மாநிலங்களில் இருந்து ஒரு லாரியில் வெங்காயம் கொண்டுவருவதற்கு ரூ.65 ஆயிரம் வரை வாடகை கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. மேலும் விளைச்சல் குறைவாக இருந்தது. இதனால் மார்க்கெட்டுக்கு வரத்து குறைவாக இருந்தது. இந்த நிலையில் தற்போது வடமாநிலங்களில் இருந்து வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளது. மேலும் தாராபுரம், பல்லடம் போன்ற பகுதிகளில் இருந்தும் பெரிய வெங்காயம் வரத்து உள்ளது.

இதன் காரணமாக விலை படிப்படியாக குறைய தொடங்கி உள்ளது. இதன்படி மொத்த விற்பனையில் கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.65 முதல் ரூ.70-க்கு விற்பனை செய்யப்பட்ட வெங்காயம் தற்போது ரூ.50 முதல் ரூ.55 வரை விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் 2 மாதங்களில் வெங்காயம் விலை கடும் வீழ்ச்சி அடையும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## கருவி மூலம் நிலக்கடலை விதைக்கும் விவசாயிக்கு மானியம் அதிகாரிகள் தகவல்




பொள்ளாச்சி,

கருவி மூலம் நிலக்கடலை விதைக்கும் விவசாயிக்கு மானியம் வழங்கப்படுவதாக வேளாண்மைத்துறை அதிகாரிகள் கூறினார்கள்.

மானியம்

இதுகுறித்து பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் பெருமாள்சாமி, வேளாண்மைத்துறை அதிகாரி சுமியா பானு ஆகியோர் கூறியதாவது:-

தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் எண்ணெய்வித்து இயக்கத்தின் கீழ் விதைப்பு கருவி மூலம் நிலக்கடலை விதைக்கும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.1000 மானியம் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஹெக்டேருக்கு மானியம் வழங்கப்படுகிறது. தெற்கு

ஒன்றியத்திற்கு 200 ஹெக்டேருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தில் துவரையை ஊடுபயிராக பயிரிடும் விவசாயிகளுக்கு மட்டும் மானியம் வழங்கப்படும்.

மண் வளம் மேம்படுத்தல் திட்டம்

கருவி மூலம் விதைப்பு செய்வதற்கான வாடகை ரசீது, சிட்டா, ரேஷன் கார்டு, வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றின் நகல், ஆதார் அட்டை இருந்தால் அதன் நகல் ஆகியவற்றுடன் வேளாண் விரிவாக்க மையத்தில் பதிவு செய்ய வேண்டும். பின்னேற்பு மானியம் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். மேலும் இதே திட்டத்தில் ஹெக்டேருக்கு நிலக்கடலை பயிருக்கு திரவநிலை உயிர் உரம் பாஸ்போ பாக்டீரியா 500 மில்லி லிட்டர், நிலக் கடலை ரைசோபியம் 500 மில்லி லிட்டர் வழங்கப்படுகின்றன. இதற்கு மானியமாக ரூ.150 வழங்கப்படுகிறது. மீதி தொகையை விவசாயிகள் செலுத்த வேண்டும். ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு மானிய விலையில் வழங்கப்படும்.

தெற்கு ஒன்றியத்திற்கு 80 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தில் மண் வளம் மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பை அல்லது தக்கை பூண்டு விதைப்பிற்கு மானியம் வழங்கப்படுகின்றன. ஊடுபயிராக இல்லாமல் தனிப்பயிராக சாகுபடி செய்திருக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு ரூ.2 ஆயிரம் மானியம் வழங்கப்படுகின்றன. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஹெக்டேருக்கு வழங்கப்படும். தெற்கு ஒன்றியத்திற்கு 65 ஹெக்டேருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளன. வேளாண்மை உதவி அதிகாரி ஆய்விற்கு பிறகு மானியம் விவசாயிகளின் வங்கி கணக்கில் சேர்க்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## ஈரோட்டில் மீன்களின் வரத்து குறைந்ததால் விலை உயர்வு



ஈரோடு

ஈரோட்டில் மீன்களின் வரத்து குறைந்ததால் விலை உயர்ந்தது. வஞ்சிரம் மீன் ஒரு கிலோ ரூ.500–க்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>மீன் விற்பனை</u>

ஈரோடு ஸ்டோனி பாலம் அருகில் மீன் மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இங்கு தூத்துக்குடி, நாகப்பட்டினம், ராமேஸ்வரம், கேரளா ஆகிய பகுதிகளில் இருந்து மீன்கள் விற்பனைக்காக கொண்டு

வரப்படுகிறது. இதேபோல் ஆந்திர மாநிலத்தில் இருந்தும் மீன்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

ஈரோடு மீன் மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை கூட்டம் அதிகமாக காணப்படும். அதுபோல் நேற்றும் மீன்கள் வாங்குவதற்காக ஏராளமானவர்கள் வந்திருந்தனர். இதனால் மீன் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்றது.

<u>விலை உயர்வு</u>

கடந்த வாரத்தை காட்டிலும் மீன்களின் வரத்து குறைவாக இருந்தது. இதனால் விலையும் சற்று அதிகமாகி விற்பனை ஆனது. மீன்கள் ஒரு கிலோ ரூ.10 முதல் ரூ.50 வரை விலை அதிகரித்து விற்பனை செய்யப்பட்டன.

ஈரோட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட மீன்களின் விலை விவரம் வருமாறு:– (ஒரு கிலோவில்)

வஞ்சிரம் – ரூ.500, ரோகு – ரூ.130, கட்லா – ரூ.140, கருப்பு வாவல் – ரூ.450, இரால் – ரூ.450, முரள் – ரூ.250, ரூபா – ரூ.160, அயிலை – ரூ.180, சங்கரா – ரூ.220, மத்தி – ரூ.100, சுரா – ரூ.400, நண்டு – ரூ.250, ஏற்றுமதி ரக நண்டு – ரூ.350, நெய் மீன் – ரூ.120.

<u>வரத்து குறைவு</u>

இதுகுறித்து மீன் வியாபாரிகள் கூறும்போது, ''ஈரோட்டிற்கு தென் மாவட்டங்களில் இருந்து கடல் மீன்களும், ஆந்திர மாநிலம் நெல்லூரில் உள்ள பண்ணைகளில் வளர்க்கப்படும் மீன்களும் அதிகமாக விற்பனைக்கு வருகிறது. 4 நாட்களில் புரட்டாசி மாதம் தொடங்க உள்ளதால் அசைவ உணவு சாப்பிடாமல் அதிகம்பேர் விரதம் இருப்பார்கள். இதனால் இந்த வாரம் மீன்கள் வாங்குவதற்கு வழக்கத்தைவிட கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. இந்தநிலையில் மீன்களின் வரத்து குறைந்து உள்ளதால் விலை உயர்ந்துள்ளது'', என்றனர்.

## ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் பூந்தொட்டிகளை மலர்மாடத்தில் அடுக்கும் பணி தொடங்கியது



ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2–வது சீசனை முன்னிட்டு 7 ஆயிரம் பூந்தொட்டிகளை மலர்மாடத்தில் அடுக்கும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

2–வது சீசன்

நீலகிரி மாவட்டத்தில் ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் கோடை சீசனும், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் 2–வது சீசனும் நடக்கிறது. 2–வது சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன.

மேலும் 7 ஆயிரம் பூந்தொட்டிகளில் டேலியா, சைக்ளோமென், பேன்சி, இன்கா மேரி கோல்டு உள்ளிட்ட பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு இருந்தன. தற்போது இந்த மலர் செடிகளில் பூக்கள் பூத்து குலுங்க தொடங்கி உள்ளன.

மலர்மாடத்தில் அடுக்கும் பணி

தற்போது 2–வது சீசன் தொடங்கி உள்ள நிலையில் பூந்தொட்டிகளை பூங்காவில் உள்ள மலர் மாடத்தில் அடுக்கும் பணி நேற்று தொடங்கியது. இதனை பூங்கா உதவி தோட்டக்கலை துறை இயக்குனர் உமாராணி

தொடங்கி வைத்தார். இது குறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறியதாவது:–

ஊட்டியில் தற்போது 2–வது சீசன் தொடங்கி உள்ளது. இந்த சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விப்பதற்காக ஆஸ்டர், கார்னேசன், டையான்தஸ், கலிபோர்னியா பாப்பி, ஸ்வீட் லில்லியம், கோச்சியா, சன் பிளவர், டாலியா, லேடிஸ் லேஸ், சப்னேரியா, கோடி ஷியா, அஜிரேட்டம், ஹெலி ஹீரைசம், ஜீனியா சிலோசியா, அமாரன்தஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளன.

சுற்றுலா பயணிகளை கவரும்

மேலும் 7 ஆயிரம் பூந்தொட்டிகளில் நடவு செய்யப்பட்டு உள்ள மலர்செடிகளில் பூக்கள் பூக்க தொடங்கி உள்ளதால் மலர் மாடத்தில் இந்த பூந்தொட்டிகளை அழகாக அடுக்கி வைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன. இந்த பணிகள் நிறைவடைந்ததும் சுற்றுலா பயணிகளின் பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள்.

இதுதவிர பூந்தொட்டிகளை கொண்டு அழகிய வடிவங்களும் அமைக்கப்படும். இது சுற்றுலா பயணிகளை வெகுவாக கவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பந்தலூர் தாலுகாவில் வாழை கிலோ ரூ.16–க்கு விற்பனை; விவசாயிகள் கவலை




பந்தலூர் தாலுகாவில் வாழை கிலோ ஒன்று ரூ.16–க்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

ஊடுபயிராக வாழை

பந்தலூர் தாலுகா அய்யங்கொல்லி, கொளப்பள்ளி, பொன்னானி, குந்தலாடி, எருமாடு உள்பட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான தேயிலை விவசாயிகள் வசித்து வருகின்றனர். இவர்கள் தங்கள் தோட்டங்களில் தேயிலையை பயிரிட்டு உள்ளனர். ஆனால் தற்போது தேயிலைக்கு போதிய விலை கிடைக்காத காரணத்தால் ஊடுபயிராக வாழைகளை நடவு செய்து வருகின்றனர்.

மேலும் வயல்களில் வாழை விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு பயிரிடப்படும் வாழைகள் தற்போது அறுவடை செய்யப்பட்டு அந்தந்த பகுதிகளில் உள்ள வாழை ஏஜெண்டுகள் மூலம் வாங்கப்பட்டு கொச்சின், கோவை சென்னை, மைசூர், மும்பை உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

கிலோ ரூ.16–க்கு விற்பனை

கடந்த ஆண்டு வாழைக்காய் ஒரு கிலோவுக்கு ரூ.48 வரை விலை கிடைத்தது. இதனால் வாழை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் வாழைக்கு நல்ல விலை கிடைத்து வந்ததாலும், மகசூலும் நன்றாக கிடைத்து வந்ததால் பெரும்பாலான விவசாயிகள் வாழை விவசாயத்தில் தனிகவனம் செலுத்த தொடங்கினர்.ஆனால் தற்போது வாழையின் விலை நாளுக்கு நாள் சரிந்து வருகிறது. இதனால் வாழை விவசாயம் மேற்கொண்ட விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். பந்தலூர் தாலுகா பகுதியில் தற்போது வாழை கிலோ ஒன்று ரூ.16–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் நஷ்டம் அடைந்து வருகின்றனர்.

விவசாயிகள் கவலை

இதுகுறித்து வாழை விவசாயிகள் கூறும் போது, கடந்த காலங்களில் வாழைக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. இதனால் பலரும் மற்ற விவசாயத்தினை கைவிட்டு வாழை விவசாயத்தை மேற்கொண்டனர். ஆனால் விளைச்சல் அதிகரித்து உள்ளதால் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது. ஓணம் உள்ளிட்ட பண்டிகை காலங்களில் வாழைக்காய் தேவை அதிகரிக்கும். அப்போது நல்ல விலை கிடைக்கும். ஆனால் இந்த ஆண்டு நல்ல விலையும் கிடைக்கவில்லை.தற்போது வாழைக்கு ரூ.16 மட்டுமே கிடைக்கிறது. காட்டு யானைகள், பன்றிகள், குரங்குகள் உள்ளிட்ட வனவிலங்குகள் வாழைகளை சேதப்படுத்தி விடுகிறது. இதனால் வாழை விவசாயம் செய்யும் செலவு கூட கிடைப்பதில்லை என்று வேதனையுடன் தெரிவித்தனர்.

## சின்னமனூர் பகுதிகளில் வரத்து அதிகரிப்பால் முருங்கைக்காய் விலை வீழ்ச்சி



சின்னமனூர்,

சின்னமனூர் பகுதிகளில் வரத்து அதிகரிப்பால் முருங்கைக்காய் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது. எனவே அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>முருங்கை விளைச்சல்</u>

தேனி மாவட்டம் சின்னமனூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேலாக காய்கறிகள் விளைவிக்கப்படுகிறது. இதில் கத்தரிக்காய், வெண்டை, புடலை, பாவை, அவரை, முட்டைகோஸ், பீட்ரூட் உள்ளிட்ட காய்கறிகள் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் சின்னமனூர் ஓடைபட்டி, அய்யம்பட்டி, சங்கராபுரம், காமாட்சிபுரம், வெள்ளையம்மாள்புரம் போன்ற பகுதிகளில் அதிக அளவில் முருங்கைகாய் பயிரிடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் விளையும் முருங்கைக் காய்கள் அதிக அளவில் வெளிமாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. நல்ல விலை கிடைத்து வந்த நிலையில் தற்போது முருங்கைக்காய் வரத்து அதிகரித்து விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த மாதம் ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.35 வரை கிடைத்து வந்த நிலையில் தற்போது நல்ல ரக காய் ஒரு கிலோவுக்கு ரூ.8 முதல் ரூ.10 வரை மட்டுமே கிடைக்கிறது. இந்த விலை தற்போது போதுமானதாக இல்லை என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

கொள்முதல் மையங்கள்

இது குறித்து விவசாயி கிருஷ்ணன் என்பவர் கூறுகையில், மரம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் ஏக்கருக்கு ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் வரை கடன் வாங்கி விவசாயத்திற்காக செலவு செய்துள்ளோம். இந்நிலையில் நல்ல மகசூல் கிடைத்துள்ளது. ஆனால் விலை மிகவும் குறைந்து பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு சின்னமனூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் காய்கறி கொள்முதல் மையங்கள் அமைக்க வேண்டும்.

மேலும் அனைத்து விளை பொருட்களுக்கும் விலை நிர்ணயம் செய்து வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் விவசாயிகளின் நிலை உயரும். இல்லையென்றால் விவசாயிகள் விளை நிலங்களை விட்டு, விட்டு பிழைப்பிற்காக வேறு மாவட்டங்களுக்கும், மாநிலங்களுக்கும் வேலை தேடி செல்லும் நிலைக்கு தள்ளப்படுவார்கள், என்று கூறினார்.

கோரிக்கை

இதனை கருத்தில் கொண்டு உடனடியாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு தக்க நிவாரணம் வழங்கவும், முருங்கைக்காய்களை கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க புதிய திட்டம் குழுக்கள் அமைக்கும் பணி தீவிரம்




தேனி,

தோட்டக்கலைத்துறை சார்பில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக விவசாயிகளை கொண்ட குழுக்கள் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

<u>இயற்கை வேளாண்மை</u>

தோட்டக்கலைத்துறை சார்பில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க இந்த ஆண்டு புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்திற்காக தேனி மாவட்டத்தில் மா பயிர் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. நிரந்தர தோட்டக்கலைப் பயிரில் இந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பதற்காக மா பயிர் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. 3 ஆண்டுகளுக்கு இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

தேனி மாவட்டத்தில் பெரியகுளம், போடி, ஆண்டிப்பட்டி ஆகிய 3 வட்டாரங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஒரு வட்டாரத்திற்கு 50 விவசாயிகளை கொண்ட குழு அமைத்து 50 ஏக்கர் மாந்தோப்பில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அதன்படி 3 வட்டாரங்களிலும் மொத்தம் 150 விவசாயிகளை கொண்டு, 150 ஏக்கர்

பரப்பளவில் இத்திட்டம் செயல்படும். இதற்காக இந்த வட்டாரங்களில் மா விவசாயிகளை கொண்ட குழு அமைக்கும் பணி நடந்து வருகிறது.

குழுக்கள் அமைக்கும் பணி

ஒவ்வொரு குழுவிலும் ஒரு முன்னோடி செயல்திட்ட விவசாயி தேர்வு செய்யப்பட உள்ளார்கள். இந்த விவசாயிகள் தாங்கள் சார்ந்த குழுக்களுக்கும் தோட்டக்கலைத்துறைக்கும் இடையே பாலமாக செயல்படுவார்கள். குழுவில் இடம் பெறும் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை குறித்து தொடர்ந்து பல்வேறு கட்ட பயிற்சிகள் அளிக்கப்படும். பின்னர் இடுபொருட்கள் மற்றும் மானிய உதவிகள் வழங்கப்படும். ஒவ்வொரு குழுவுக்கும் இந்த திட்டம் செயல்படுத்தப்படும் 3 ஆண்டு காலத்தில் சுமார் ரூ.6 லட்சத்து 90 ஆயிரம் செலவு செய்யப்படும்.

இதற்கான குழு அமைக்கும் பணி நடந்த வருவதால், இந்த குழுவில் இணைந்து இத்திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மையில் மா சாகுபடி செய்து பயன்பெற விரும்பும் போடி, பெரியகுளம், ஆண்டிப்பட்டி வட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் தங்கள் பகுதியை சேர்ந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு தங்களை குழு உறுப்பினராக சேர்த்துக் கொள்ளலாம். இத்தகவலை தேனி தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சின்னராஜ் தெரிவித்துள்ளார்.

## திருப்பூர் மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் விலை கிடுகிடு உயர்வு



திருப்பூர்,

திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் 20–க்கும் மேற்பட்ட வெங்காய குடோன்கள் உள்ளன. இங்கு வெளி மாநிலங்கள் மற்றும் வெளியூர்களில் இருந்து சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு உள்ளூர் வியாபாரிகளுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களாக சின்ன வெங்காயம் வரத்து குறைந்துவிட்டதால் இருப்பில் இருந்த அனைத்து வெங்காயமும் விற்று தீர்ந்து விட்டது.

இதனால் ரூ.22–க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ சின்ன வெங்காயத்தின் விலை கிடுகிடு என உயர்ந்து நேற்று ரூ.30–க்கு விற்பனை செய்யப்பட்டது. அதே சமயம் தென்காசி மற்றும் கர்நாடகா மாநிலத்தில் இருந்து பெரிய வெங்காயம் தேவையான அளவு விற்பனைக்கு வருவதால் அதன் விலை எதுவும் உயரவில்லை இதனால் பெரிய வெங்காயம் கடந்த சில நாட்களாகவே ஒரு கிலோ ரூ.60–க்கு விற்கப்பட்டு வருகிறது.

இது குறித்து வெங்காய மொத்த வியாபாரிகள் கூறும் போது, சின்ன வெங்காயத்தின் வரத்து குறைந்து கொண்டே வருவதால் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. ஆனால் பெரிய வெங்காயத்தின் விலை உயர வாய்ப்பில்லை என்று தெரிவித்தனர்.

### திருப்பூர் மார்க்கெட்டில் காய்கறி விலை குறைந்தது



திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு திருப்பூர், பல்லடம், அவினாசி, பொங்கலூர், காங்கயம், தாராபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து அனைத்து வித காய்கறிகள், கீரை வகைகள், கொத்தமல்லித்தழை, புதினா, கறிவேப்பிலை உள்ளிட்டவை விற்பனைக்கு கொண்டுவரப்படுகின்றன. கடந்த சில நாட்களாக அனைத்து காய்கறிகளின் வரத்தும் அதிகரித்துள்ளதால் விலை மிகவும் சரிந்துள்ளது.

இதனால் திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ வெண்டைக்காய் ரூ.15–க்கும், முள்ளங்கி, பீட்ரூட் ரூ.10–க்கும், முட்டைக்கோஸ், முருங்கைக்காய் ரூ.20–க்கும், வரி கத்திரிக்காய் ரூ.20–க்கும், பவானி கத்திரிக்காய் ரூ.30–க்கும், பாகற்காய், பீர்க்கங்காய் ரூ.15–க்கும், கேரட், பீன்ஸ் ரூ.35–க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிலோ கறிவேப்பிலை ரூ.30–க்கும், பச்சை மிளகாய் ரூ.20–க்கும், மல்லித்தழை கட்டு ரூ.5–க்கும், புதினா ரூ.3–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில் காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. புரட்டாசி மாதம் தொடங்கி விட்டால் காய்கறிகள் விற்பனை அதிகரிக்கும். அப்போது அனைத்து காய்கறிகளின் விலையும் 2 மடங்கு உயர்ந்துவிடும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## திருப்பூர் மார்க்கெட்டில் மீன்விலை குறைவு: விற்பனை அமோகம் கறிக்கடைகளிலும் மக்கள் கூட்டம் அதிகரித்தது



திருப்பூர்

புரட்டாசி மாதம் நெருங்குவதால் திருப்பூர் மீன் மார்க்கெட்டில் மீன் விற்பனை அமோகமாக இருந்தது. கறிக்கடைகளிலும் மக்கள் கூட்டம் அலைமோதியது.

<u>மீன் விலை குறைந்தது</u>

திருப்பூர் தென்னம்பாளையம் மீன் மார்க்கெட்டுக்கு தமிழ்நாட்டில் இருந்து 15 டன், ஆந்திரா, கேரளாவில் இருந்து தலா 20 டன்னும், கர்நாடகாவில் இருந்து 15 டன் என்று மொத்தம் 70 டன் மீன் நேற்று விற்பனைக்கு வந்திருந்தது. அனைத்து மீன்களின் விலையும் கடந்த வாரத்தை விட கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.50 வரை குறைந்திருந்தது.

மீன் விலை குறைந்திருந்ததாலும், அதிக அளவிலான மக்கள் மீன் வாங்க வந்திருந்ததாலும் விற்பனைக்கு வந்திருந்த அனைத்து மீன்களும் விரைவில் விற்றுதீர்ந்து விட்டது. இதுகுறித்து மீன் மொத்த வியாபாரிகள் சங்க நிர்வாகிகளிடம் கேட்ட போது அவர்கள் கூறியதாவது:–

வருகிற 18–ந்தேதி புரட்டாசி மாதம் பிறக்கிறது. புரட்டாசி சனிக்கிழமை நாட்களில் பெரும்பாலான மக்கள் விரதமிருந்து பெருமாள் கோவில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்வது வழக்கம். எனவே இந்த மாதத்தில் அசைவ உணவு சாப்பிடுவோர் எண்ணிக்கை கணிசமாக குறைந்து விடும். ஆகவே இந்த வாரத்தில் மீன் வாங்க வந்துள்ள மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கிறது. வரும் வாரங்களில் மீன் விற்பனை மிகவும் குறைவாகவே இருக்கும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

<u>ஆட்டுக்கறிக்கடை</u>

இதே போல திருப்பூரில் பல்வேறு பகுதிகளில் சுமார் 500–க்கும் மேற்பட்ட ஆட்டுக்கறி மற்றும் கோழிக்கறி கடைகள் உள்ளன. இதனால் அனைத்து இறைச்சி,மீன் கடைகளிலும் நேற்று மக்கள் கூட்டம் மிகவும் அதிகமாகவே காணப்பட்டது. ஒரு சில கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது. ஒரு கிலோ ஆட்டுக்கறி ரூ.400–க்கும், கோழி இறைச்சி ரூ.150–க்கும், நாட்டுக் கோழிக்கறி ரூ.440–க்கும் விற்கப்பட்டது.

விலையை பற்றி கவலைப்படாத மக்கள் நீண்ட நேரம் காத்திருந்து கறியை வாங்கிச்சென்றனர். இதனால் விற்பனை நன்றாக இருந்தது என்று கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

தினகரன்

**கடைமடைக்கு தண்ணீர் வராததால் 5,000 ஏக்கர் சம்பா கருகும் அபாயம்**



வேதாரண்யம்: வேதாரண்யம் பகுதி கடைமடைக்கு தண்ணீர் வராததால், 5,000 ஏக்கர் சம்பா பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகாவில் 10க்கும் மேற்பட்ட கிராமங்களில்

நேரடி நெல் விதைப்பாக சுமார் 5,000 ஏக்கரில் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த மாதம் மேட்டூரில் திறந்த தண்ணீர் இந்த பகுதிக்கு இதுவரை சரியாக வந்து சேரவில்லை. ஒருமுறை பாய்ந்த நீரை வைத்து நேரடி நெல் விதைப்பை விவசாயிகள் செய்தனர். தொடர்ந்து தண்ணீர் வராததால், பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு சில வயல்கள் காய்ந்து வெடிப்பு ஏற்பட்டுள்ளது. கடைமடைக்கு தண்ணீர் கேட்டு, விவசாயிகள் 2 முறை சாலை மறியல் செய்தனர். அப்போது வந்த பொதுப்பணித்துறை அதிகாரிகள் தண்ணீர் விடுவதாக உறுதி அளித்து சென்றனர். ஆனாலும் தண்ணீர் வரவில்லை. கிளை வாய்க்கால்களில் நீர் எட்டிக்கூட பார்க்கவில்லை. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

**சூரிய சக்தி தகடு பொருத்த முடிவு 500 ரயில்களில் சோலார் மின்சாரம்**




புதுடெல்லி: ரயில்வே துறைக்கு மின்சாரம், எரிபொருள் செலவுகளால் லாபம் குறைகிறது. மாநிலங்களில் அவ்வப்போது அதிகரிக்கப்படும் மின்கட்டணங்களும் இதற்கு பெரும் தலைவலியாக இருக்கிறது. இத்துறையில் எரிபொருள் பயன்பாடு ஆண்டுக்கு சராசரியாக 5 சதவீதம் அதிகரித்து வருகிறது. நடப்பு ஆண்டில் மார்ச் மாதத்தில் மின் கட்டணம்

மட்டும் ரூ. 12,500 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த சிக்கலில் இருந்து மீளும் வகையில் ஏற்கெனவே சில ரயில் பெட்டிகளில் சோதனை அடிப்படையில் சூரியஒளி தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து மத்திய அரசு அதிகாரி ஒருவர் கூறியதாவது: மின்சார செலவை குறைக்கும் வகையில் 500 ரயில் கூரைகளில் சூரியஒளி தகடுகள் பொருத்த ரயில்வே முடிவு செய்துள்ளது. இவை 500 மெகாவாட் மின்உற்பத்தி திறன் கொண்டவை. இந்த திட்டத்துக்கு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் இவற்றுக்கு மானியம் வழங்க தயாராக உள்ளது. இதன்மூலம் 2020ம் ஆண்டில் மின் தேவையில் 10% பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது'' என்றார்.

**ஏற்றுமதியை ஊக்குவிக்க வட்டி மானியத்திட்டத்தை 3 ஆண்டு நீட்டிக்க வாய்ப்பு: மத்திய அரசு திட்டம்**




புதுடெல்லி: ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் வட்டி மானியத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்ய மத்திய அரசு

திட்டமிட்டுள்ளது. நாட்டின் ஏற்றுமதி தொடர்ந்து சரிவை சந்தித்து வருகிறது. கடந்த ஆண்டு டிசம்பர் முதலே ஏற்றுமதி பின்னடைவில் உள்ளது. எனவே, ஏற்றுமதி துறையை மந்த நிலையில் இருந்து மீட்க மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. வட்டி மானிய திட்டம் ஏற்றுமதியாளர்கள் குறைந்த வட்டியில். அதாவது மானிய வட்டியில் கடன் பெற வழிவகை செய்கிறது. இந்த திட்டம் கடந்த ஆண்டு மார்ச் 31ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது. இருப்பினும் தற்போதுள்ள ஏற்றுமதியின் மந்தநிலையை கருத்தில் கொண்டு, வட்டி மானிய திட்டத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உள்நாட்டு உற்பத்தி மட்டுமின்றி வெளிநாடுகளில் உள்ள சூழ்நிலைகளும் ஏற்றுமதிக்கு பாதகமாக அமைகின்றன. இதனால் கடந்த 8 மாதஙகளாக ஏற்றுமதி தொடர்ந்து பின்னடைவாகவே இருக்கிறது. கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் ஏற்றுமதி 2,313 கோடி டாலருக்கு ஏற்றுமதி நடந்துள்ளது. இது 10.3 சதவீதம் சரிவாகும். இதனால் வர்த்தக பற்றாக்குறையும் 1,281 கோடி டாலராக இருக்கிறது. இதற்கு முன்பு கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில்தான் ஏற்றுமதி 7.27 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்திய ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பும் வட்டி மானிய சலுகை வழங்குமாறு வலியுறுத்தி வருகிறது. இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டால், வெளிநாடுகளில் வர்த்தக போட்டியை சமாளித்து ஏற்றுமதியை அதிகரிக்க உதவும் என ஏற்றுமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**விளைச்சல் அதிகரிப்பால் கேந்தி கிலோ ரூ. 5 ஆக சரிவு**



பாவூர்சத்திரம்: கீழப்பாவூர் பகுதியில் கேந்தி பூ விளைச்சல் அமோகமாக இருப்பதால் விலை கடுமையாக சரிந்து விட்டது. கிலோ ரூ.5 க்கு கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் நஷ்டத்தை எதிர்கொள்கின்றனர். ஓணம் பண்டிகையை முன்னிட்டு கேந்திப்பூ கிலோ ரூ.50க்கு விற்றது. அதன்பிறகு விலை உயரவில்லை. தற்போது சிவகாமிபுரம் மார்க்கெட்டுக்கு தினமும் 4,000 கிலோ வரை கேந்தி பூ விற்பனைக்கு வருகிறது. ஆனால், 500 கிலோதான் வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். முகூர்த்த தினங்கள் இல்லாததே இதற்கு காரணம். நஷ்டத்துக்கு விற்க மனமின்றி விவசாயிகள் பூக்களை பறிக்காமல் செடியிலேயே விட்டு விடுகின்றனர். பூக்களை பாதுகாத்து விற்க அரசு குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

**நறுமண பொருட்களின் தரம் நிர்ணயிக்க சர்வதேச மாநாடு**




புதுடெல்லி: நாட்டின் ஏற்றுமதியில் மிளகு, மிளகாய், மஞ்சள் உள்ளிட்ட நறுமண பொருட்களின் பங்கு முக்கியமானது. இந்நிலையில் முக்கியமான 10 நறுமண பொருட்களுக்கு தரம் நிர்ணயிப்பது பற்றி ஆலோசிக்க சர்வதேச மாநாடு, இந்திய நறுமண பொருட்கள் வாரியம் சார்பில் கோவாவில் இன்று துவங்கி 18ம் தேதி வரை நடக்கிறது. இதில் 36 நாடுகளில் இருந்து 120 பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோடக்ஸ் விதிமுறை மற்றும் ஒவ்வொரு நறுமண பொருளுக்குமான தர நிர்ணயம் குறித்து இதில் விவாதிக்கப்பட உள்ளது.

**மிளகு ஏற்றுமதி உயர்வு**



புதுடெல்லி: கடந்த ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலக்கட்டத்தில் வெளிநாடுகளுக்கு 16,000 டன் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் இதே காலக்கட்டத்தில் இது 12,000 டன்களாக இருந்தது. தட்டுப்பாடு காரணமாக விலை அதிகமாக இருந்தாலும் ஏற்றுமதி உயர்ந்துள்ளது. குறிப்பாக கொச்சி துறைமுகத்தில் இருந்து மட்டும் 13,990 டன் மிளகு ஏற்றுமதி ஆகியுள்ளது. இது கடந்த ஆண்டை விட 46.68 சதவீதம் அதிகம் என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வெளிமாநில அரிசி விலையும் எகிறியது



தமிழக வணிகர்கள் அதிக அளவு கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருந்து அரிசியை வாங்கி விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இதனால், இந்த மாநிலங்களில் அரிசிக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதை சாதமாக பயன்படுத்தி கர்நாடகா, ஆந்திரா மாநிலத்தினர் அரிசி விலையை உயர்த்தியுள்ளனர். இதனால், அரிசி விலை உயர தொடங்கியுள்ளது. சோனா ரக அரிசி(ஆபாயில்) கிலோ ரூ.42லிருந்து ரூ.46, ேசானா ரக அரிசி(2ம் ரகம்) கிலோ ரூ.40லிருந்து

ரூ.44 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. ஆனால், தமிழகத்தில் உற்பத்தியாகும் அரிசி விலை உயரவில்லை. இட்லி அரிசி கிலோ ரூ.30லிருந்து ரூ.26, ரூபாலி அரிசி ரூ.30லிருந்து ரூ.28, பாபட்லா(புதுசு) ரூ.40லிருந்து ரூ.38, பாபட்லா(பழையது) ரூ.44லிருந்து ரூ.42, வெள்ளை பொன்னி ரூ.48லிருந்து ரூ.46, வெள்ளை பொன்னி(பழையது) ரூ.54லிருந்து ரூ.52, பொன்னி பச்சரிசி ரூ.32 லிருந்து ரூ.28 ஆகவும் விலை குறைந்துள்ளது என மளிகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## 2.5 செ.மீ. மழை பெய்தால் 1.70 கோடி லிட்டர் நீர் சேமிப்பு_: மக்கள் பங்களிப்புடன் சாதித்த பஞ்சாயத்து தலைவர்_



திண்டுக்கல் அருகே பஞ்சாயத்து தலைவர் ஒருவர், மக்கள் பங்களிப் புடன் பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் அமைத்து ஒரு முறை பெய்யும்

2.5 செ.மீ. மழை யில் 1.70 கோடி லிட்டர் தண்ணீ ரைச் சேமித்து, குடிநீர் பிரச்சினைக் குத் தீர்வுகண்டு சாதனை படைத் துள்ளார்.

வைகை ஆறு பாய்ந்தாலும், ராமநாதபுரம் மாவட்டம்போல திண்டுக்கல் மாவட்டமும் வறட்சி மிகுந்தது. இந்த மாவட்டத்தில், தொப்பம்பட்டி அருகே வாகரை பஞ்சாயத்து கிராமங்கள், ஆண் டுக்கு வெறும் 5 நாள் 625 மி.மீ. முதல் 690 மி.மீ. மழை மட்டுமே பெய்யக்கூடிய மிகக்குறைவான பகுதி.

இந்த பஞ்சாயத்தில் வாகரை, பூசாரிகவுண்டன்வலசு, கட்டம நாயக்கன்வலசு எனப்படும் குக் கிராமங்கள் உள்ளன. இங்கு 1,119 குடும்பத்தினர் வசிக்கின்றனர். இவர்களில் 398 குடும்பத்தினர் 3,150 ஏக்கரில் விவசாயம் செய்கின்றனர். விவசாயத் தேவைக்காக, இந்த பஞ்சாயத்தில் 68 திறந்தவெளிக் கிணறுகளும், 3,621 ஆழ்துளைக் கிணறுகளும் உள்ளன. குடிநீர் தேவைக்காக 8 திறந்தவெளிக் கிணறுகளும், 55 ஆழ்துளைக் கிணறுகளும் உள்ளன.

2010-ம் ஆண்டு முதல் 2013-ம் ஆண்டு வரையிலான வறட்சிக் காலத்தில், இந்த பஞ்சாயத்தில் பெரும்பாலான திறந்தவெளிக் கிணறுகள் முற்றிலும் வறண்டு விட்டன. ஆழ்துளைக் கிணறுகளில் 12 மட்டுமே, இந்த பஞ்சாயத்தின் மொத்த குடிநீர் மற்றும் விவசா யத் தேவைகளுக்கும் பயன்படுத் தப்பட்டன. குடிநீர் பஞ்சத்தால் மக்கள் கடந்த 10 ஆண்டுகளாக விவசாயத் தோட்டங்களுக்கு, பல கி.மீ. தூரம் நடந்துசென்று குடங்களில் தண்ணீர் எடுக்கும் அவலம் ஏற்பட்டது. வறட்சியால் விவசாயிகள் தோட்டக்கலை பயிர் சாகுபடி பரப்பை குறைத்துக் கொண்டு, ஒருசில குறுகியகால காய்கறிகளை மட்டுமே பயிரிட்டு வந்தனர்.

இந்நிலையில், வாகரை பஞ் சாயத்து தலைவர் கே.சின்னான், ஒவ்வொரு கிராமத்திலும் 15 முதல் 20 முன்னோடி விவசாயிகளை ஒருங்கிணைத்து குழுக்களை அமைத்தார். அவர்கள் மூலம் மண் மற்றும் நீர்வள மேம்பாடு,

நிலத்தடி நீர் சேமிப்புத் திட்டத்தில், எந்தெந்த இடத்தில் பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் அமைத்தால் அதிக மான தண்ணீரைச் சேமிக்கலாம் என்பதை அறிந்து, அந்த இடங் களில் கடந்த 2 ஆண்டுகளில் அரசு ஒதுக்கிய ரூ. 16.75 லட்சம் மதிப்பீட் டில் மக்கள் பங்களிப்புடன் 30 பண்ணைக் குட்டைகளும், 15 சிறிய, பெரிய தடுப்பணைகளும், ஒரு கசிவுநீர் குட்டையும் அமைத்தார்.

நடப்பாண்டு தற்போது வரை, சரியாக மழை கிடைக்காத நிலையில் இந்த பஞ்சாயத்து கிராமங்களில் சாரல் மழை மட்டுமே மூன்று நாட்கள் பெய்துள்ளது. அதனால், இந்த பஞ்சாயத்தைச் சுற்றிய அனைத்து பஞ்சாயத்துகளும் குடிநீர், விவசாயப் பாசனத்துக்கு தண்ணீர் இல்லாமல் சிரமப்பட்டு வருகின்றன.

ஆனால், மக்கள் பங்களிப்புடன் பஞ்சாயத்து தலைவர் அமைத்த பண்ணைக்குட்டைகள், தடுப் பணையால் தற்போது வாகரை பஞ்சாயத்து மட்டும் செழிப்பு மிகுந்த பகுதியாக திகழ்கிறது. குடிநீர் பிரச்சினை இல்லை. விவ சாயத்துக்கு தண்ணீர் தட்டுப்பாடு இல்லை. தற்போது மக்காச்சோளம், தக்காளி, வெண்டைக்காய், சின்ன வெங்காயம் சாகுபடி செய்து விவ சாயிகள் அதிகளவு விளைச்சல் கண்டுள்ளனர்._

**வறட்சி மாவட்டங்களுக்கு முன்மாதிரி_**

இதுகுறித்து மாவட்ட நீர் வடிப்பகுதி மேம்பாட்டு வேளாண் பொறியாளர் பிரிட்டோராஜ் ‘தி இந்து’விடம் கூறியது:

‘‘வாகரை பஞ்சாயத்தில், தற்போது 2.5 செ.மீ. மழை பெய்தாலே அவர்கள் அமைத்த 30 பண்ணைக்குட்டைகள் மூலம் சுமார் ஒரு கோடியே 50 லட்சம் லிட்டர் மழை நீரும், ஒரு தடுப்பணை மூலம் சுமார் 15 லட்சம் லிட்டர் மழை நீரும், ஒரு கசிவு நீர் குட்டை மூலம் சுமார் 6 லட்சம் லிட்டர் மழை நீரும் மொத்தம் ஒரு கோடியே 71 லட்சம் லிட்டர் தண்ணீரை சேமிக்கின்றனர். இதே 2.5 செ.மீ. மழை ஆண்டுக்கு 5 முதல் 6 தடவை பெய்தால் 8.5 கோடி லிட்டர் தண்ணீரை இவர்கள் சேமிக்கலாம்.

மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதல் விருதுநகர் வரையிலான மேட்டுப்பகுதி மாவட்டங்களில் மண் சரிவும், செம்மண் சரளையும் அதிகம் காணப்படுகிறது. இந்த மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைவு.

வெயில் காலங்களில் அதிகமான குடிநீர் தட்டுப்பாடும், பயிருக்குத் தேவையான ஈரப்பதமும் இன்றி விவசாயப் பரப்பு குறைந்து விவசாயிகள் வருந்தும் சூழ்நிலையே இருக்கிறது. இந்த மாவட்டங்களில் பஞ்சாயத்து தலைவர்கள், வாகரை பஞ்சாயத்தை முன்மாதிரியாகக் கொண்டு மழை நீரை சேகரிக்க பண்ணைக்குட்டைகள், தடுப்பணைகள் அமைத்தால் வறட்சிக் காலத்திலும் குடிநீர் பஞ்சத்துக்கு தீர்வுகண்டு விவசாயத்தை தக்க வைக்கலாம்'' என்றார்.___

நீர் அறுவடை தொழில்நுட்பத்தில் முப்போகம் சாகுபடி_: முன்மாதிரியாக விளங்கும் கோத்தர் பழங்குடியின கிராமம்_



▲ திருச்சிக்கடி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டை மற்றும் விவசாய நிலம்.

பருவநிலை மாற்றம் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் மழைப் பொழிவு குறைந்து வருகிறது. இதனால், நீர் அறுவடை தொழில்நுட்பம் மூலமாக ஆண்டுக்கு முப்போகம் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர் கோத்தர் பழங்குடியின விவசாயிகள்.

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் குறைந்தபட்சம் 120 நாட்கள் மழை பெய்யும். ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தென்மேற்குப் பருவமழையும், நவம்பர் மாதத்தில் வட கிழக்குப் பருவ மழையும் பெய்யும். பருவ மழைக் காலங்களில் பெய்யும் மழையே, விவசாயம் மற்றும் குடிநீருக்கான ஆதாரம். இதன்மூலமாக ஒரு போகம் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பருவமழை இல்லாத காலத்தில், விவசாய நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன.

இந்நிலையில், கோத்தகிரி அருகே திருச்சிக்கடி என்ற கோத்தர் பழங்குடியின கிராமத்தில், நீர் அறுவடை தொழில்நுட்பம் மூலமாக ஆண்டுக்கு முப்போகம் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும், மத்திய மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் மூலமாக 'பண்ணைக் குட்டை மாதிரி திட்டம்' செயல்படுத்தப்பட்டுள்ளது.

காரட், புருக்கோலி, பூண்டு, கிழங்கு, காலிஃப்ளவர், பீன்ஸ் உள்ளிட்ட பயிர்களுடன் கால்நடைக்குத் தேவையான பசுந்தீவனமும் விளைவிக்கப்படுகிறது. இதற்கு ஆதாரமான தண்ணீருக்காக அமைக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டையில் அனைத்து நாட்களிலும் தண்ணீர் உள்ளது. இதில், மீன்கள் வளர்த்து கூடுதல் வருவாய் ஈட்டப்படுகிறது.



▲ கே.கண்ணகம்பட்டன், கூ.கண்ணன்.

இதுதொடர்பாக பழங்குடியின விவசாயி கே.கண்ணகம்பட்டன் கூறியதாவது:

'திருச்சிக்கடியில் 10 விவசாயிகள் ஒருங்கிணைந்து, பண்ணைக் குட்டை அமைத்து 9 ஏக்கரில் காய்கறி விவசாயம் மேற்கொள்கிறோம். மத்திய மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி மையத்தின் அறிவுரைப்படி, படிவட்டம் முறையில் விவசாயம் மேற்கொள்கிறோம்.

மண் அரிப்பு ஏற்படாமல் இருக்க, ஓரங்களில் நேப்பியர் புற்கள் வளர்க்கிறோம்.

இந்த புற்கள், மண் பிடிமானத்தை அதிகரிப்பதுடன் கால்நடைகளுக்கு பசுந்தீவனமாகிறது. இதனால், மாடுகளில் இருந்து 2 லிட்டர் பால் கூடுதலாக கிடைக்கிறது. அதன் சாணம், பயிர்களுக்கு உரமாகிறது.

குட்டையில் கண்ணாடி கெண்டை மீன்கள் வளர்ப்பதால், ஆண்டுக்கு 100 முதல் 200 கிலோ மீன்கள் பெறுகிறோம். ஆண்டு முழுவதும் தண்ணீர் இருப்பு உள்ளதால், முப்போகம் சாகுபடி செய்கிறோம். இவ்வாறு, அவர் கூறினார்.

மத்திய மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி மைய முதன்மை விஞ்ஞானி கூ.கண்ணன் கூறியதாவது:

நீலகிரி மாவட்டத்தில் பருவநிலை மாற்றம் காரணமாக சமச்சீராக மழை பெய்வதில்லை. இந்த ஆண்டு ஜூலையில் 25 சதவீதம், ஆகஸ்டில் 45 சதவீதம் மழை குறைந்துள்ளது. ஆனால், சராசரியாக 23 சதவீதம் கூடுதலாக மழை பெய்துள்ளது.

பருவம் தவறி பெய்யும் மழையே இதற்குக் காரணம். விவசாயம் மேற்கொள்ளப்படாத ஏப்ரல், மே மாதங்களில் அதிக மழை பெய்கிறது. சில நேரங்களில் மழை பொய்த்துவிடுவதால், விவசாயிகள் வாடகைக்கு நீர் வாங்கி பாய்ச்சுகின்றனர். நீலகிரியில் காய்கறி விவசாயத்துக்கு முதலீடு அதிகம். மழை பொய்த்துவிட்டால் நஷ்டம் அதிகம்.

தண்ணீருக்காக ஆழ்துளைக் கிணறு வெட்டப்படுவதால், செலவு அதிகமாகிறது. இதற்கு மாற்றான தொழில்நுட்பம்தான் நீர் அறுவடை.

இதற்குச் செலவு குறைவு, பயன் அதிகம். திருச்சிக்கடி கிராமத்தில் 130 கோத்தர் பழங்குடியினர் உள்ளனர். இப் பகுதியில் பண்ணைக் குட்டை அமைத்து விவசாயம் செய்யப்படுகிறது. இதன்மூலமாக ஆண்டுக்கு முப்போகம் சாகுபடி செய்கின்றனர். இதேபோல், பண்ணைக் குட்டை அமைத்து விவசாயிகள் பயனடையலாம். இவ்வாறு அவர் கூறினார்._______

முதுமையைத் தள்ளிப்போடும் புரோபயாட்டிக் உணவு_



நோய்எதிர்ப்புத் திறன் தொடர்பாக ஆராய்ச்சி செய்த ரஷ்ய விலங்கியல் நிபுணர் எலீ மெட்ஷ்னிகாஃப், நோபல் பரிசும் பெற்றவர் 1915-களில் உலகின் சராசரி ஆயுட்காலம் குறைவாக இருந்த நிலையில், பல்கேரிய விவசாயிகளின் சராசரி ஆயுட்காலம் மட்டும் 87 ஆண்டுகளாக இருப்பதைக் கவனித்தார். அது மட்டுமல்லாமல், அங்கு ஆயிரம் பேரில் குறைந்தபட்சம் 20 பேர் 100 வயதுக்கு மேல் வாழ்ந்துவந்தனர்.

அவர்களுடைய உணவுப் பழக்கமும், வாழ்க்கை முறையும் வேறுபட்டிருப்பதையும் அவர் அறிந்தார். புரோபயாடிக்குகளால் செறிவூட்டப்பட்ட பால் உள்ளிட்ட புளிக்க வைத்த உணவு பொருட்களை அதிகமாகச் சாப்பிட்டதுதான், அவர்களுடைய நீண்ட ஆயுளுக்குக் காரணம்.

**புரோபயாடிக் என்றால்**

புரோபயாடிக் ஓர் உயிருள்ள நுண்ணுயிரி. ஓர் அற்புத உணவும்கூட. இதைப் போதுமான அளவு உட்கொண்டால், உடலுக்கு நன்மை கிடைக்கும்.

பால் பொருட்கள், புளிக்க வைத்த உணவுப் பொருட்கள், செறிவூட்டப்பட்ட உணவு வகைகள், மாத்திரை மருந்து, உலர்ந்த வடிவம், வித்துப் படிவங்கள், திரவமாக புரோபயாட்டிக்குகள் கிடைக்கின்றன.

ஆரம்பத்தில் மாற்று மருத்துவ முறையில்தான் புரோபயாடிக் அதிகம் பரிந்துரைக்கப்பட்டுவந்தது. இப்போது அலோபதி மருத்துவத்திலும் புரோபயாட்டிக் பரிந்துரைக்கப்பட ஆரம்பித்துவிட்டது.

ஆரோக்கியத்தை பாதுகாக்க அனைத்து வயதினரும் புரோபயாடிக்கை பயன்படுத்த முடியும். அது வாழ்நாளை நீடிக்கும், வயதான தோற்றத்தை மட்டுப்படுத்தும்.

**நோய்க் கட்டுப்பாடு**

பொதுவான வயிற்றுப்போக்கு, குடல் எரிச்சல் நோய் (Irritable Bowel Syndrome) போன்றவற்றுக்கு நிவாரணம் அளிக்க புரோபயாட்டிக் பயன்படுத்தப்படுகிறது. அது மட்டுமல்ல, புற்றுநோய் செல்கள் பெருகுவதைத் தடுக்கவும், மட்டுப்படுத்தவும் உதவுகிறது.

பெப்டிக் அல்சர், இரைப்பைப் புற்றுநோய்க்குக் காரணமாக இருக்கும் ஹெலிகோபாக்டர் பைலோரி என்ற பாக்டீரியாவின் வளர்ச்சியைப் புரோபயாட்டிக் தடுக்கிறது. குடல் அழற்சி நோயைத் தடுப்பதிலும், அதன் தீவிரத் தன்மையைக் குறைத்து நிவாரணம் அளிப்பதிலும் புரோபயாட்டிக் முக்கியப் பங்கு வகிக்கிறது.

வயிற்றில் அழற்சி ஏற்படக் காரணமாக இருக்கும் சைட்டோகைன்கள் உருவாவதை புரோபயாட்டிக் தடுத்து, இரைப்பையின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. இதனால் குடலில் நோய் ஏற்படுத்தும் கிருமிகளுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

**ஆயுள் நீட்டிப்பு**

தோல் ஒவ்வாமை, ஜலதோஷம், காய்ச்சல், சளி, ஆஸ்துமா போன்றவற்றை புரோபயாடிக் மூலம் கட்டுப்படுத்தமுடியும்.

திட்டவட்டமான உணவுப் பழக்கத்துடன், புரோபயாட்டிக் அதிகமுள்ள புளித்த பால் பொருட்கள், தயிர், சீஸ், வெண்ணெய், குறைந்த

லாக்டோஸ் உணவுப் பொருட்களை அதிகமாக உட்கொண்டுவந்தால், முதுமையைத் தள்ளிப்போடலாம், ஆயுளையும் நீட்டித்துக் கொள்ளலாம்.___

**வாசகர்கள் கவனத்துக்கு: நலம் நலமறிய ஆவல்**

'நலம், நலமறிய ஆவல்' கேள்வி - பதில் பகுதி தொடர்ந்து வெளிவரும். பல்வேறு மருத்துவ முறைகளைச் சேர்ந்த மருத்துவர்கள் அடுத்த வாரம் முதல் பதில் அளிக்கிறார்கள். வாசகர்கள் தங்களுடைய முக்கியமான மருத்துவச் சந்தேகங்களை தொடர்ந்து அனுப்பலாம்.

**மின்னஞ்சல்: nalamvaazha@thehindutamil.co.in**

முகவரி: நலம், நலமறிய ஆவல், நலம் வாழ,

தி இந்து, கஸ்தூரி மையம், 124,

வாலாஜா சாலை, சென்னை - 600 002

## இயற்கை முறையில் புழு கட்டுப்பாடு_- தேனி விவசாயி செய்யும் புதுமைக் கரும்பு சாகுபடி_




தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கரும்பு சாகுபடி நடைபெற்றுவருகிறது. வெட்டப்படும் கரும்புகள் அரசு மற்றும் தனியார்

சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. உற்பத்தி செய்யப்பட்ட கரும்புக்கு உரிய விலை கிடைக்கவில்லை, கரும்பு பயிருக்கு நோய் தாக்குதல் அதிகரிப்பு எனக் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் பலர் வேதனையடைந்து வருகின்றனர். ஆனால், தேனி அருகே அன்னஞ்சியில் நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் கடந்த 15 ஆண்டுகளாகக் கரும்பு விவசாயத்தை மட்டுமே செய்து, அதிக லாபம் ஈட்டி சாதனை செய்துள்ளார் முதுகலை பட்டதாரியான விவசாயி ஆர்.மோகன்குமார்.

**புழு கட்டுப்பாடு**

தன் சாகுபடி முறை பற்றி அவர் பகிர்ந்துகொண்டது: "கரும்பு சாகுபடிக்கு நுனிக் குருத்துப் புழு, தண்டுப் புழு எதிரிகளாக உள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்தினாலே 90 சதவீதத்துக்கு மேல் மகசூல் பெற முடியும். இதைக் கட்டுப்படுத்தப் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்தால் மண் வளம் பாதிக்கப்படும். இதைத் தவிர்த்துவிட்டு, பாதிப்புகளை உண்டாக்கும் புழுக்களை இயற்கை முறையில் எளிதாக அழிக்க முடியும்.

கார்சீரா எனும் பூச்சிகள் மூலம் டிரைகோகிரம்மாஜப்பானி என்ற முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. இதிலிருந்து வெளிவரும் பூச்சியிலிருந்து ஒட்டுண்ணி என்று அழைக்கப்படும் நுண்ணிய முட்டை கிடைக்கிறது. இந்த முட்டை ஒரு சி.சி. என்று அழைக்கப்படும். ஏழுக்கு 10 என்ற சதுர சென்டிமீட்டர் கொண்ட ஓர் அட்டையில், 15 ஆயிரம் நுண்ணிய முட்டைகளை ஒட்டி கரும்பு நடவு செய்த நான்கு மாதங்களிலிருந்து 15 நாட்கள் இடைவெளிவிட்டு மூன்று முறை ஒட்ட வேண்டும். மூன்று சிசி அட்டைகளைக் கரும்பு சோகைக்கு இடையில் கட்டிவிட்டால், அந்த முட்டைகள் ஒட்டுண்ணிப் பூச்சிகளை உருவாக்கிப் புழுக்களைத் தின்று, எஞ்சிய புழுக்களின் உடலில் தன்னுடைய முட்டைகளை இட்டுவிட்டுச் சென்று விடும். இதனால் புழுக்கள் முற்றிலும் அழிந்துவிடும்.

**65 டன் விளைச்சல்**

இந்த ஒட்டுண்ணிகளை உற்பத்தி செய்வதற்காகக் கூடாரம் அமைத்துக் கூண்டு மூலம் கார்சீரா பூச்சிகளை வளர்த்து வருவதுடன், ஒட்டுண்ணி

முட்டைகளை விற்பனையும் செய்துவருகிறேன். ஓர் அட்டையில் ஒட்டப்படும் ஒரு சிசி முட்டையின் விலை வெறும் ரூ. 35 மட்டுமே. ஒரு ஏக்கர் கரும்பு சாகுபடிக்கு 10 சிசி மட்டும் பயன்படுத்தினால் போதும். புழுக்கள் முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிடும். இந்தப் புழுக்களின் பாதிப்பால் சராசரியாக ஒரு ஏக்கரில் 30 டன் மட்டுமே கரும்பு விளைச்சல் இருக்கும். ஆனால், எனக்கு 65 டன்வரை விளைச்சல் கிடைத்துவருகிறது. வேர்ப்புழு, தண்டுப்புழுக்களை அழித்ததன் காரணமாகக் கரும்பு விவசாயத்தில் வெற்றி பெற முடிந்தது” என்கிறார் மோகன்குமார்.

படங்கள்: ஆர். சௌந்தர்_

**விவசாயி மோகன்குமார், தொடர்புக்கு: 99448 65516**

தமிழ் முரசு
TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY

## 15,000 டன் பருப்பு இறக்குமதி செய்ய மத்திய அரசு திட்டம்

புதுடெல்லி: இந்தியாவில் பெரும்பாலான பருப்பு வகைகளின் விலைகள் கிலோ ரூ.100க்கு மேல் அதிகரித்துவிட்டதால் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் 15,000 டன் பருப்பு இறக்குமதி செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

தற்போது துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை அதிகபட்சமாக கிலோ ரூ.155 வரை ( சிங்கப்பூர் வெள்ளி 3.30 ) விற்கப்படுகிறது. இதனால் பருப்பு விலையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக மத்திய

அரசு அதிகாரிகளின் உயர்மட்டக்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில், துவரம் பருப்புக் கூடுதலாக 5,000 டன் இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டது. ஏற்கெனவே 10,000 டன் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை வெளிநாடுகளில் இருந்து வந்து கொண்டிருக் கிறது. இதில் முதல்கட்ட சரக்குகள் இம்மாதம் 23ஆம் தேதி இந்தியா வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தகவலை மத்திய நுகர்வோர் நலத்துறை செயலாளர் சி.விஸ்வநாத் தெரிவித்தார்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி - தமிழகத்தில் மழை பெய்யுமா?




சென்னை, செப்.14-

வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. தென்மேற்கு பருவமழை கர்நாடகா, கேரளா, ஆந்திரா மற்றும் மராட்டியம் ஆகிய மாநிலங்களில் தீவிரம் அடைந்துள்ளது.

இந்தநிலையில் அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் மழை பெய்யும் என்றும், வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

வங்கக்கடலின் மேற்கு மத்திய மற்றும் வடமேற்கு பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. ஆனால் இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்னும் வலுவடையவில்லை. ஓரிரு தினங்களில் வலுவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வலுவடைந்த பின்னரே எந்த திசை நோக்கி நகர்கிறது என்பதை வைத்து, தமிழகத்தில் மழை பெய்யுமா? என்பதை சொல்ல முடியும். தொடக்க நிலையில் இருப்பதால் புயல் சின்னமாக உருவெடுக்குமா? என்பதையும் தற்போது உறுதிப்படுத்த முடியாது.

வெப்பச்சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் ஒருசில இடங்களில் இன்று (திங்கட்கிழமை) மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.இவ்வாறு அவர் கூறினார்.

## விளைச்சல் அமோகம்: வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் திசையன்விளை முருங்கைக்காய்



திசையன்விளை, செப்.14–

திசையன்விளை அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் முருங்கைகள் பயிரிடப்பட்டுள்ளது. வறட்சியை தாங்கும் சக்தி முருங்கைக்கு உள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் மூலம் முருங்கை விவசாயம் செய்து வருகின்றனர்.

ஆண்டுக்கு 8 மாதங்கள் வருவாய் தரும் இப்பகுதியில் விளையும், யாழ்ப்பாணம், குரூஸ், அழகி செடி ரக முருங்கைக்காய்களுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. தற்போது இந்த ரக முருங்கைக்காய்கள் விளைச்சல் அதிகமாக உள்ளது. தினசரி 80 டன்களுக்கு மேல் திசையன்விளை மொத்த வியாபாரக் கடைகளுக்கு விற்பனைக்கு வருகிறது.

இவைகள் தரம் பிரிக்கப்பட்டு 5 கிலோ, 10 கிலோ எடையில் அட்டைபெட்டிகளில் அடைக்கப்பட்டு குவைத், சவுதிஅரேபியா, மஸ்கட், துபாய், லண்டன், கனடா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி

செய்யப்படுகிறது. முருங்கைக்காய் ஏற்றுமதி தொடங்கியுள்ளது. 4 மாதங்கள் ஏற்றுமதி நடைபெறும் என முருங்கைக்காய் மொத்த வியாபாரிகள் கூறியுள்ளனர்.

ஏற்றுமதி தொடங்கியுள்ளதால் முருங்கைக்காய்களுக்கு நல்ல விலை கிடைப்பதாக விவாசயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

**ஏமாற்றிய மழை: மானாவாரி நிலங்களில் கருகிய மக்காச்சோளம்**



சத்திரப்பட்டி, செப். 13–

திண்டுக்கல் மாவட்டம் சத்திரப்பட்டி அருகில் உள்ள 16 மலைக்கிராமங்களில் வட கிழக்கு பருவமழையை நம்பி பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இதுதவிர இப்பகுதி விவசாயிகளுக்கு மானாவரி பயிர்களே வருடம் முழுவதும் கைகொடுத்து வருகிறது.

மஞ்சநாயக்கன்பட்டி, தேவத்தூர், காளிப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் மானாவரி பயிராக மக்காச்சோளம் பயிரிடப்பட்டிருந்தது.

ஆடி மாதம் பெய்யும் மழை இந்த வருடம் இப்பகுதி விவசாயிகளை ஏமாற்றி விட்டது. இதனால் மக்காச்சோளப் பயிர்கள் அனைத்தும் கருகி போய் விட்டது. குறைந்த அளவு பரப்பளவில் மக்காச்சோளம்

பயிரிட்டிருந்த ஒரு சில விவசாயிகள் கிணற்று பாசனத்தை கொண்டு தண்ணீர் பாய்ச்சினாலும் இது அவர்களுக்க முழுவதும் கை கொடுக்கவில்லை. எனவே அவர்களுக்கு பெருத்த அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

வேளாண்மை அதிகாரிகள் இப்பகுதி நிலங்களை பார்வையிட்டு உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.